# கூட்டுக்குள்ளே சில காலம்



## அனுராதா ரமணன்

**1**

நந்தினி, தனது போர்ஷன் கதவைத் திறந்து கொண்டு, அந்த பிரம்மாண்டமான வீட்டின் கூடத்தில் வந்து நிற்கும் போது - இரவு மணி ஒன்றோ, இரண்டோ...

கூடத்தில் விதவிதமான சோபாக்களையும், ஊஞ்சலையும் தவிர - வேறு ஈ காக்கையில்லை.

'எல்லோரும் எங்கே போய்த் தொலைந்தார்கள்...'

அப்பொழுதுதான், அன்று காலையில் அவளது மாமியார் சொன்னது நினைவுக்கு வருகிறது.

''இந்த வீட்டுல, கல்யாணம் ஆனவுடனேயே - அவங்க அவங்களை தனியா வச்சிடறதுதான் பழக்கம். சேர்ந்து இருக்கறது எல்லாம், உங்க மாமனாருக்குப் பிடிக்காது. நாலு பிள்ளைகளுக்கும் இதே வீட்டுலேயே நாலு போர்ஷன்... கம்மாவா... அந்தக் காலத்துலேயே திட்டம் போட்டு கட்டின வீடு... கட்டிடம் மாத்திரம் அஞ்சு கிரவுண்டுக்குக் குறையாம... உனக்கான போர்ஷன் இதோ - இந்த இடது கைப்பக்கம், பெரியவங்க ரெண்டு பேரும் மாடியில... மூணாவது பிள்ளை - உங்க போர்ஷனுக்கு எதிர்த்த மாதிரி... நானும், உங்க மாமனாரும், இதோ - இந்த பின்பக்க போர்ஷன்லே... ஹால் எல்லாருக்கும் பொது...''

புதுமணத் தம்பதிகளை ஆரத்தி சுற்றி, வரவேற்று, சுற்றிய ஆரத்தியை வாசலில் கொட்டிய அதே வேகத்தில் மரகதம் சொன்ன வார்த்தைகள்...

நந்தினி வீட்டைச் சேர்ந்தவர்கள், அந்த வீட்டின் செழுமையையும், அலங்காரத்தையும் பார்த்துப் பார்த்து பிரமித்தனர்.

அன்று காலை - எல்லோருக்குமே பொது வீட்டில்தான் சாப்பாடு...

'பொது வீடு' - என்பது, அந்த பெரிய ஹாலும், அதை ஒட்டிய பெரிய சாப்பாட்டுக் கூடமும், அந்தக் கூடத்தைத் தாண்டிப் போனால் தென்படும் விசாலமான சமையற்கட்டும், சாமான் வைக்கும் அறையும்தான்....

சமையற்காரன், நாலு எடுபிடி ஆட்களை வைத்துக் கொண்டு சமைத்துப் போட்டான். சம்பந்தி விருந்து கிட்டத்தட்ட ஒரு கல்யாணம் போல அமர்க்களப்பட்டது.

நடுப்பகலிலேயே ஒவ்வொருவராய் விடைபெற... மீதியிருந்தவர்கள் மாலை சிற்றுண்டியையும் ஒரு கை பார்த்து விட்டு நகர...

"ராத்திரியும் எல்லாரும் சேர்ந்தே சாப்பிட்டுடலாம்... நாளையிலேருந்து அவங்க அவங்க வீட்டுல சமைச்சுக்கட்டும்."

ராஜரத்னம் - அவர்தான் இந்த வீட்டுத் தலைவர் - நந்தினியின் மாமனார் சொல்லி விட்டார்.

சரியாய் இரவு எட்டரை மணிக்கு சாப்பாடு... ஒன்பது மணி சுமாருக்கு - நந்தினியின் கணவன் குமார் ஜரிகை வேட்டியைக் களைந்து, புது பேண்ட் ஷர்ட்டை மாட்டிக் கொண்டு, கலைந்து கிடந்த கிராப்பை சீவியபடி, மனைவியிடம் சொன்னான்.

"வாசற் கதவை சாத்திக்கோ நந்தினி. நான் கொஞ்சம் வெளியில போயிட்டு வரேன்..."

அவள், மை தீட்டிய விழிகளை அகல விரித்தாள்.

"இத்தனை நேரத்துக்கு மேலேயா..."

"உம்... பிஸினஸ் விஷயமா, அவசரமா ஒருத்தரை மீட் பண்ணியாகணும்... அப்பாதான், உடனே போய் பார்த்துட்டு வரச் சொன்னார்."

மாமனாரின் கட்டளை என்பதை அறிந்ததும், நந்தினி எதுவும் பேசவில்லை.

மேலும், முந்தாநாள் அறிமுகமான மனுஷனிடம் எப்படி அத்தனை கலகலப்பாகப் பேச முடியும்?

குமாரை இரண்டு மாதங்களுக்கு முன் - ஒருமுறை பார்த்திருக்கிறாள்... தன் பெற்றோருடன், அவளைப் பெண் பார்க்க வந்த பொழுதுதான் - அந்த முதல் சந்திப்பு.

முகம், மனசில் பதியக்கூட இல்லை.

முந்தாநாள் கல்யாணம். தமிழ்நாட்டில் மிகப் பரவலாகப் பேசப்படும் வரதட்சிணை, சீர், செனத்தி, இவைகளில் எதுவும் எள்ளளவும் குறையாமல் நடந்த கல்யாணம்.

பணத்தில் மிதப்பவர்கள் என்றாலும் - மகனின் திருமண விஷயத்தில் எதற்காகவும், யாருக்காகவும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை குமரின் பெற்றோர்.

இந்த விஷயத்தில், நந்தினிக்குமே கொஞ்சம் குறைதான்.



"இவாதானாகட்டும், இதெல்லாம் எதுக்கு வீண் செலவுன்னு, அப்பா, அம்மாவை ஒருவார்த்தை கேட்க மாட்டாரோ..."

"கேட்டிருப்பாராயிருக்கும். அவங்க மசிஞ்சிருக்க மாட்டாங்களாயிருக்கும். ஏற்கனவே மூணு மருமகளுங்களும் பெரிய பெரிய இடத்துலேயிருந்து ஏகப்பட்ட சீரோட வந்திருக்காங்க. அதுக்கெல்லாம் கொஞ்சத்துக்கு கொஞ்சமாவது ஈடு செய்யற மாதிரி, நாலாவது மருமகளும் வரணும்னு அவங்க நினைச்சதுல என்ன தப்பு..."

இந்தப் பெண்கள்தான் எத்தனை சுலபமாகத் தங்களை சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள்!

இருந்தாலும் நந்தினியைப் பெற்றவளுக்கு மட்டும் ஒரு குறை - இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

"நம்ம பொண்ணு பி.எஸ்ஸி., படிச்சிருக்கா... அந்தப் பையனோ வெறும் பி.யு.ஸி. தான்... நாளைக்கே ரெண்டு பேருக்குள்ளேயும் இது ஒரு விவகாரமாயிடக் கூடாது பாருங்க."

நந்தினியின் தந்தையும் அண்ணனும் இதை ஆவேசமாக மறுத்தார்கள்.

"படிப்புல என்ன இருக்கு. நம்ம வீட்டுல ஒவ்வொண்ணையும் காலேஜுக்கு அனுப்பி பி.ஏ.ன்னும் எம்.ஏ.ன்னும் படிக்க வச்சிருக்கோம். படிச்ச படிப்புக்கு எங்கேயாவது வேலை கிடைச்சிருக்கா?"

"நம்ம பாபு, யுனிவர்ஸிடி "ஃபர்ஸ்ட்" வந்தான். வயசு இருபத்தஞ்சு ஆறது. இன்னமும் எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ் வாசல்லே மணி அடிச்சு, கற்பூரம் காட்டி, சுத்தி வந்திட்டிருக்கான்.

"இங்கே அப்படியில்லே... ராஜரத்னத்தோட பிஸினஸ் முழுக்க - இந்த நாலு பிள்ளைங்களும்தான் பார்த்துக்கறாங்க. ஒவ்வொருத்தனுக்கும் மாசம் பொறந்தா - பத்தாயிரத்துக்குக் குறையாம இன்கம் வர்றது... இதுல ஒரு விசேஷம் என்னான்னா - இந்த நாலு பிள்ளைகளுமே பி.யு.ஸிக்கு மேலே படிக்கல்லே...

அதுக்கு ராஜரத்னம் என்ன சொல்றார் தெரியுமா? படிச்ச படிப்புக்கு ஏத்த வேலை கிடைக்காதப்ப, அநாவசியமா அந்தப் படிப்பைப் படிச்சு, காலத்தையும், காசையும் ஏன் வீணாக்கிக்கணும்னு கேட்கறாரு... நியாயம்தானே...

இங்கே பாரு. இந்தப் பையனோட அண்ணன் சிவராம்னு ஒருத்தன்... அவனுக்குப் பொண்ணைக் கொடுத்திருக்கிறது. என்

சிநேகிதன்தான்.. அவன்தான் சொன்னான்... ரொம்பவும் கட்டுக் கோப்பான குடும்பம். எந்த தப்புத்தண்டாவுக்கும் பசங்க போக மாட்டாங்கன்னு - நாலு பேருக்கும் அப்பாகிட்ட அத்தனை பயம், மரியாதையாம்... இன்னிக்கும், இவங்க அப்பா உத்தரவுப்படிதான எல்லாமாம்.''

நந்தினியின் அப்பாவிற்கு, வந்த நல்ல வரனை விடக்கூடாது என்கிற தவிப்பு... தான் கேட்டது பாதி, தன் கற்பனை பாதி என, எல்லாவற்றையும் சேர்த்து கலந்து அடித்தார்.

சீ வகைகள்தான் இவர்களது கணிப்புக்கு மேல் ஓடி விட்டது.

நந்தினி - தனது போர்ஷனில் ஒரு பக்கமாய் சுருட்டி வைக்கப்பட்டிருந்த வெல்வெட் மெத்தைகளைப் பார்க்கிறாள்.

இன்னும் இவைகளைப் பிரித்துப் போடவில்லை. அன்று மாலை, சம்பந்தி மனிதர்களிடம் விடைபெறுவதற்கு முன்னால், அப்பாவும் அண்ணாவுமாய், புது கட்டிலை, தலைப்பக்கம் எது, கால் பக்கம் எதுவென ஒரு மணி நேரம் யோசித்து, பொருத்திவிட்டுப் போனார்கள்.

''மெத்தையை இப்பவே விரிச்சுடலாமா மீனா...''

இப்படி, அப்பா, அம்மாவைக் கேட்டதற்கு, அவள், அவரை ரகசியமாய் கடிந்து கொண்டாள்.

'போதுமே... சம்பந்தியம்மா காதுல விழுந்து தொலைக்கப் போறது. அப்புறம் பொண்ணு வீட்டுக்காரங்களுக்கு கட்டிலையும், மெத்தையையும் விட்டா, வேற நினைப்பே இல்லைன்னு சொல்லிடப் போறாங்க...''

இதைச் சொல்லிவிட்டு அவள், நந்தினியைப் பார்த்துச் சிரித்தாள்.

முன்பெல்லாம் - முன்பெல்லாமென்றால் - நந்தினியின் கழுத்தில் தாலியேறுவதற்கு முன்பெல்லாம் - அம்மா, பெண்ணின் காதுபட இதுபோன்ற விஷயங்களைப் பேசவே மாட்டாள்.

நந்தினிக்கு இன்னமும் நன்றாக நினைவிருக்கிறது.

அவள் அப்பா, வீட்டிலிருந்த தங்களது பழைய கிழிந்து போன மெத்தைகளைப் புதுப்பிக்க கொடுத்திருந்தார்.

அதற்கே, அம்மா அவரைத் தனியே அழைத்துப் போய் கடிந்து கொண்டாள்.

''பரண் மேல் கிடந்த மெத்தைக்கு இப்ப என்ன கல்யாணம் வந்திருக்கு.''



''எலி கடிச்சு குதறிட்டிருக்கறதை ஒழுங்கா தச்சுப் போட்டுக்கலாமேன்னுதான். கொஞ்ச நாளா முதுகுவலி வேறயா. மெத்தை கிடக்கறப்ப எதுக்காக ஜமுக்காளத்துல படுத்துக்கணும்னு தான்...''

''அது சரி, உங்க மெத்தைய மட்டும் எடுத்து பஞ்சடைச்சு, சரி பண்ணி வச்சுக்கறது... என்னோடதை எதுக்காக எடுத்துக் கொடுத்தீங்களாம்? வயசு வந்த பொண்ணு இருக்கற வீட்டுல... ஐயோ, என் மானம் போறது...''

''எதுக்கும்மா மானம் போறது...''

- இப்படி கேட்டபடி நந்தினி அங்கு வந்து நின்றவுடன், அவள்தான் என்னமாய் பதறிப் போய் விட்டாள்.

''ஒண்ணுமில்லையே... ஒண்ணுமேயில்லே... நானும் ஒரு வாரமா சொல்லிட்டிருக்கேன் உங்க அப்பாகிட்ட... இந்த காலா நைஞ்சுபோன சட்டையப் போட்டுக்காதீங்க... என் மானம் போறதுன்னு... கேட்டாத்தானே...''

இப்படி அவசரமாய் எதையோ உளறிக் கொட்டிக் கொண்டே, கணவனைப் பார்வையாலேயே சுட்டாள்.

இதற்குப்பின், அவளது மெத்தை புதுப்பிக்கப்பட்டு, திரும்பி வந்த பிறகும் அவள், அதை விரலால் சீந்தவில்லையே...

''எம்மா, நீ மெத்தை போட்டுக்கறதில்லே...?''

நந்தினி கேட்ட போது, வெட்கத்தில் முகம் சிவக்க எரிந்து விழுந்தாள்.

''ஆமா. நான் கெட்ட கேட்டுக்கு மெத்தை ஒண்ணுதான் குறைச்சல்; போடி...''

இன்று அதே அம்மாவே, மகளை நடுவில் வைத்துக் கொண்டு, கணவரிடமும், தனது உறவுக்காரப் பெண்களிடமும் ஆயிரம் விஷயங்களைப் பேசுகிறாள்; சிரிக்கிறாள்...

'ஒரே நாளில் தான், அம்மாவுக்கு சமதையாகி விட்டோமா என்ன...'

நந்தினி, தன்னுடன் சீராக வந்த ஆளுயாரக் கண்ணாடி பதித்த இரும்பு பீரோவின் எதிரில் வந்து நிற்கிறாள்.

'பரவாயில்லை... நான் அழகுதான்.'

'இத்தனை நாளும் கண்ணுக்குத் தெரியாத அழகெல்லாம்

அப்பொழுதுதான் தெரிவது போல...

குமார் மாதிரி - மஞ்சள் கலந்த சிவப்பில்லை ,அவள். மாநிறம் தான். கண்களும் உதடும் அப்படியே அம்மா. ஏன், நீண்ட தலைமுடி கூட... மூக்கும், இந்த ஆளை அடித்துப் போடும் உடற்கட்டும் மாத்திரம் அப்படியே அப்பா...

'மூக்கு மட்டும் அம்மாவைப் போல இருந்திருக்கலாம்.'

இந்தக் குறை, அவளுள் எப்போதுமே உண்டு. அப்பாவுக்கு கொஞ்சம் சப்பை மூக்கு... இவளுக்கும் அப்படியே. ஆனால், அந்த மூக்குகூட, இன்று புதுசாய் போட்டிருக்கும் ஒற்றைக் கல் வைர மூக்குத்தியால் அசாத்திய அழகுடன் மிளிர்வது போல...

குமார் வெளியே கிளம்பிப் போனதுமே, அவள் தனது கல்யாணப் பட்டுப் புடவைகளை எடுத்து பீரோவில் வைக்கிறாள். கழுத்திலும், காதிலும் கல்லைக் கட்டிவிட்டாற போலிருந்த நகைகளைக் கழற்றி, பீரோவில் வைத்து மூடுகிறாள். எவர்சில்வர் பாத்திரங்களைக் கொண்டு போய், சமையலறையில் ஒழுங்காக அடுக்குகிறாள்.

போர்ஷன் போர்ஷன் என்று மரகதம் அடிக்கடி சொல்வதை வைத்து, ஒரு ஹால், படுக்கையறை, சமையலறை இத்தனைதான் இருக்கும் என்று கற்பனை செய்து வைத்திருந்த நந்தினிக்கு - அந்த போர்ஷன் மிக ஆச்சரியமாகத்தான் இருந்தது.

நவீன வசதிகளுடன் பெரிய ஹாலும், சாப்பாட்டு அறையும், இரண்டு படுக்கையறைகளுமாய் அமர்க்களமாக இருந்தது வீடு.

அத்தனை பெரிய ஹாலுக்கு, அவளது பிறந்த வீட்டிலிருந்து வந்த சோபா செட் சின்னதுதான்.

என்ன செய்வது... இதைவிடப் பெரிய சோபா செட் வாங்குவதானால், அவள் அப்பா தெருவில் படுக்க வேண்டியது தான்.

மர சாமான்களின் புது வார்னீஷ் வாசனையை - மூக்கை சுருக்கி, ஒருவித சந்தோஷத்துடன் முகர்ந்தபடி படுத்திருந்தவளுக்கு நேரம் போனதே தெரியவில்லை.

வெளி ஹால் சுவர் கடிகாரம் பனிரெண்டு முறை அடித்து ஓய்ந்ததும்தான் - இன்னும் குமார் வரவில்லை என்கிற எண்ணம் உறைக்க -

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள் - ஒருமுறை கதவைத் திறந்து கொண்டு, வெளி ஹால் பக்கம் எட்டிப் பார்க்கிறாள்.



ஒருத்தருமில்லை.

என்னதான், அவரவர்களை தனிக்குடித்தனம் வைத்திருந்தாலும் - வீட்டுக்குப் புதுசாய் வந்த பெண்ணுக்கு, துணையாகவாவது யாராவது கொஞ்ச நேரம் விழித்திருக்க மாட்டார்களோ...

இரண்டு நாட்களாகவே சரியாகத் தூக்கமில்லாததால் கண்களிரண்டும் நெருப்புப் பந்தமாய் எரிகிறது அவளுக்கு...

மாப்பிள்ளை அழைப்பன்று, அம்மா இரவு முழுக்க அவளைத் தூங்கவே விடவில்லை. மறுநாள் விடிகாலையிலேயே முகூர்த்தம். இந்த இரவு வரைதான், மகள் தனக்கு சொந்தம் என்கிற நினைப்பின் துக்கத்தினூடே, மகளின் கழுத்தைக் கட்டிக் கொண்டு படுத்தபடி பேசிக் கொண்டேயிருந்தாள்.

''இந்தாடி... உங்க மாமனார் பார்க்கத்தான் ரொம்பக் கண்டிப்பானவர் மாதிரி இருக்காரே தவிர - பழகறதுக்கு ரொம்ப சாதுவாம். பொண்டாட்டிக்கு அடங்கினவர்னு கூட சொல்லிக்கறாங்க.''

''அப்புறம்... உன் புருஷனையும் சேர்த்து நாலு பசங்களும், உங்க மாமனாரோட மூத்தா குழந்தைங்களாம். மரகதம்மா ரெண்டாந் தாரமாம். இவளுக்கு குழந்தைங்க ஏதும் இல்லையாம். ஆனாலும், பிள்ளைங்க கிட்ட ரொம்பப் பிரியமா நடந்துப்பாளாம். அதுவும் உன் புருஷன்கிட்ட அவளுக்கு கொள்ளைப் பாசமாம். ஏன்னா, இவ கல்யாணமாகி வர்றப்ப, இந்தப் பிள்ளை ஒரு வயசு குழந்தையாம்...''

''சண்டை எதுவும் வரக்கூடாதுங்கறதுக்காகத்தான் கல்யாணமானவுடனேயே தனிக்குடித்தனம் வச்சுடறாங்க. இருந்தாலும் நீ, எந்த விஷயமானாலும், மாமியாருக்கு மதிப்பு கொடுத்து - கேட்டுக்க... என்ன...''

''வீட்டுல பண்டிகை, நாள் கிழமையின்னா, பெரியவங்களை நமஸ்காரம் பண்ண மறந்துடாதே... வீட்டுல பாயசம், பலகாரம் எது பண்ணினாலும், மாமியாருக்கும், மத்த ஓரகத்திகளுக்கும் சேர்த்து பண்ணு... என்ன... ஒண்ணு, தனிக்குடித்தனமா தொலைவுல இருக்கணும்... இல்லையா, எல்லாரும் சேர்ந்து ஒரே சமையல் சாப்பாடா, கூட்டுக் குடும்பமா இருக்கணும். இது ரெண்டுமில்லாத அதிசயமா இருக்கு.''

''நீ யார்கிட்டயும் பகைச்சுக்காதேம்மா. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்...''

விடிய விடிய இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு

மறுநாளிரவு வேறுவிதத்தில் தூக்கம் பறிபோயிற்று.

கல்யாணத்தன்றே முதலிரவு.

குமார், அன்றிரவை பேசியே கழித்தான்.

தன் குடும்பம்... அண்ணன், அண்ணிகளிடம் அவன் பழகும் விதம்... முக்கியமாய் மரகதம்... அவளிடம் அவனுக்குள்ள பக்தி... விசுவாசம்.

''இங்கே பாரு... என் அண்ணாக்கள் மூணு பேரும் நல்லவங்கதான். ஆனாலும் பெண்டாட்டிதாசன்கள்... நான் யாரோடயும் அதிகம் பேச மாட்டேன். நான் உண்டு; என் வேலை உண்டுன்னு இருப்பேன்.''

''அண்ணிங்களுக்கெல்லாம் திமிர் ஜாஸ்தி. அதுவும் மூத்தவ அபிராமி இருக்காளே... தான், பெரிய இடத்து பொண்ணுன்னு ஏக மண்டை கனம். அவங்ககூட எல்லாம் நீ பேசவே கூடாது.... என்ன?''

''உனக்கு எது வேணுமானாலும் சித்தியைக் கேளு. எங்க வீட்டுலேயே நம்பகமான மனுஷி அவதான்.''

''அப்புறம்... வீட்டுக்குப் போனதும், உன்னோட நகை, வெள்ளிப் பாத்திரம், புடவை - இதுங்களையெல்லாம் சித்திகிட்ட கொடு. ஏன்னா, அவளைப் பார்க்க நாலு பெரிய மனுஷங்க வீட்டு லேடீஸ் வருவாங்க... 'என் மருமக சீராக் கொண்டு வந்தது'ன்னு எல்லாத்தையும் அவங்களுக்கெல்லாம் காமிக்கணும்னு ஆசைப்படுவா. அந்தக் காலத்து மனுஷி இல்லையா. இன்னும் இந்த சம்பிரதாயங்களையெல்லாம் மீற முடியலே.''

''எங்க அப்பா ஒரு சமயம் போல இருக்க மாட்டாரு. கொஞ்சம் 'மூடி' டைப். எங்களுக்கே ஏதாவது காரியம் ஆகணும்னா கூட, நாங்க சித்திய விட்டுத்தான் கேட்க சொல்லுவோம்.''

இத்தனை சொன்னவன் - இரவு வெளியே போனால் திரும்பி வர - இவ்வளவு நேரமாகும் என்று சொல்லிவிட்டுப் போக மாட்டானோ...

இதுவே, நந்தினி தன் பிறந்த வீட்டில் இருந்தால் - இரவு இரண்டு மணி எப்படியிருக்கும் என்று கூடத் தெரியாமல் காடாந்தகாரமாய் தூங்கிக் கொண்டிருப்பாளே...

நந்தினி - வெளி ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் வந்தமருகிறாள்.

ஹால் முழுக்க ரோஜாப்பூ இதழ்கள். ஒரு பக்கமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பரிசளிப்பு பொட்டலங்கள்; ஊஞ்சலைச் சுற்றி,



மரகதம் கிள்ளிப் போட்ட வெற்றிலைக் காம்புகள்; ஹாலின் நடுப் பகுதியிலிருந்து மேல் நோக்கிப் புறப்பட்ட மாடிப்படி கைப்பிடிச் சுவரில் மாட்டப்பட்டிருந்த உதிர்ந்த ரோஜாப்பூ மாலைகள்...

நந்தினிக்கு கவலை பிடித்துக் கொள்கிறது.

குமார், காரில் போனானா, இல்லை ஸ்கூட்டரில் போனானா என்பதுகூட அவளுக்குத் தெரியாது.

ஒருவேளை நடந்து போயிருந்தால்...

திரும்பிவர பஸ் கூட கிடையாதே...

'அப்பம்... அப்பம்... அதுதான் வீட்டு வாசல்லே ரெண்டு காரும், மூணு ஸ்கூட்டரும் நின்னுட்டிருந்ததே... நீ பார்க்கலையா... இத்தனையும் இருக்கறப்ப, எதுக்காக நடந்து போகணுமாம்.'

அவள், ஹாலைத் தாண்டி, வாசற் போர்டிகோ பக்கம் வருகிறாள்.

வெளிப்பக்கம் இரும்புக் கம்பி போட்ட இழுப்புக் கதவு பூட்டப்பட்டிருக்க -

போர்டிகோவிலேயே வாட்ச்மேன்...

'இவனை எழுப்பிக் கேட்கலாமா...?'

ஒரு கணம் யோசித்தவள், அடுத்த கணமே தன் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறாள்.

எதிர்போர்ஷனின் படுக்கையறையில் நீலநிற விடிவிளக்கு எரிவது, வென்டிலேட்டர் வழியே தெரிய...

அவர்கள் வீட்டு காலிங்பெல்லை அழுத்தப் போனவள், அந்த நேரத்தில் அவர்களை எழுப்புவது லஜ்ஜைக்குரிய விஷயமாக இருந்ததால், அந்த நினைப்பையும் மாற்றிக் கொள்கிறாள்.

'ஏன்... பேசாம, இவரோட சித்தியையே போய் கேட்டா என்ன... 'இத்தனை நேரமாச்சு; இன்னும் அவர் வரல்லையே'ன்னு கேட்டா என்ன தப்பு...'

அவள், இருட்டான தாழ்வாரத்தைக் கடந்து, தட்டுத்தடுமாறி, மாமியார் இருக்குமிடத்தை நோக்கிப் போக...

அந்த போர்ஷன் கதவைத் தட்டுவதற்கு முன்பே மாமனாரின் கரகரத்த குரல் - அவளது கால்களைக் கட்டிப் போடச் செய்கிறது...

''வேண்டாம், வேண்டாம்னு எத்தனையோ குறுக்கே விழுந்து தடுத்தும் கேட்காம சின்னவன் கல்யாணத்தை நடத்திட்டே. இனிமே அந்தப் பொண்ணை நினைச்சா பரிதாபமா இருக்குடி மரகதம்...''

''என்ன... என்ன பரிதாபம்னு கேட்கறேன். எங்கேயோ ஒரு குமாஸ்தாவுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவளை அழைச்சுட்டு வந்து, நாலுலே ஒரு பாகம் சொத்து கொடுக்கப் போறீங்களே... அப்புறமென்ன... புத்திசாலியா இருந்தா, அவனைத் திருத்தி வழிக்குக் கொண்டு வரட்டும். இல்லையா... இந்த மாடுக்கும் வேளா வேளைக்கு சோத்துக்கு துணிக்கு கவலையில்லாம, ஏதோ, இதுவாவது கிடைச்சுதேன்னு சந்தோஷப்பட்டுக்கட்டும்.''

''கல் மனசுடி உனக்கு.''

''இருக்கலாம். பத்து மாசம் சுமந்து ஒரு பிள்ளைய பெத்துக்க தெரியாதவளுக்கெல்லாம், நல்ல மனசு, இப்படித்தான் கெட்டுப் போயிடுமோ என்னமோ...''

''ஒரு தடவை போய், அந்தப் பொண்ணு என்ன பண்றான்னு பார்த்துட்டு வாயேன் மரகதம்.''

நந்தினிக்கு தலையை சுற்றுகிறது.

'ஐயோ... இது என்ன இவங்க என்னென்னமோ பேசிக்கிறாங்க...'

தூக்கமும், பயமும் சேர்ந்து அவளைத் தடுமாறச் செய்ய... கீழே விழப் போனவள் - அருகிலிருந்த ஸ்டூலைத் தள்ளிவிட்டு, சுவரைப் பிடித்துக் கொள்ள...

சத்தம் கேட்டு கதவைத் திறந்த மரகதம், இவளைக் கண்டதும் வெளிறிப் போகிறாள்.

''என்ன...''

''அவர்... அவர் எங்கே இன்னும் காணோம்...?''

''யாரு... குமாரா... இன்னுமா வரல்லே? என்ன பிள்ளை போ... இப்படித்தான்... ஒரு விஷயமா அனுப்பிச்சா அதை முடிச்சுட்டு நேரே வரமாட்டான். ஃபிரண்ட்ஸை பார்க்க அங்கேயிங்கே போயிடுவான். நீ போய் படு... தானா வந்து சேருவான்.''

நந்தினி அவளையே உற்றுப் பார்க்க - அவள், பேச்சை திசை திருப்புவதற்காக - இடுப்பைப் பிடித்துக் கொண்டு, அருகிலிருந்த ஸ்டூலில் உட்காருகிறாள்.

''அப்பாடி... இடுப்பை என்னமா வலிக்கறது... பத்து நாளா ஒரிடத்துல நிற்க நேரமில்லே. இப்பத்தான் படுக்கலாம்னு போனேன். இந்த மனுஷர், 'நச் நச்'சுனு கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டார்.

அவள் புலம்பிய அதே சமயத்தில், வாசல் இரும்பு கேட்



கிறீச்சிடுகிறது.

நாலு பேராய் சேர்ந்து குமாரை தூக்கி வர...

''ஐயோ!''

நந்தினி அலறுகிறாள்.

''வந்துட்டானா...?''

- மரகதம், தனது ஸ்தூல சரீரத்தைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு எழுந்திருக்க...

எந்தவித பதட்டமும் இல்லாமல் வாட்ச்மேன் வாசற் கதவைத் திறந்து விடுகிறான்.

''நல்லா குடிச்சுட்டு, நடுரோடுல விழுந்து கிடந்தாருங்க. யாரு செஞ்ச புண்ணியமோ, லாரி, காருலே மாட்டிக்கலே... சட்டைப் பையில விஸிட்டிங் கார்டு இருந்தது... அதனாலதான்...''

வந்தவர்கள் சொல்லி முடிப்பதற்குள், மரகதம் உட்பக்கம் குரல் கொடுக்கிறாள்.

''முத்தப்பா...''

''இதோ வந்தேங்க...''

எங்கேயிருந்தோ ஒரு வேலைக்காரன் எட்டிப் பார்க்கிறான்.

''ஐயாவைக் கேட்டு ஒரு நூறு ரூபா வாங்கிட்டு வா...''

பணம் வந்ததும், தாளை அவர்களிடம் நீட்டுகிறாள் மரகதம்.

''உங்க உதவிக்கு ரொம்ப நன்றி...''

அவள் கை குவிக்க... அவர்கள் தயங்கித் தயங்கி வெளியேற...

தாரை தாரையாய் கண்ணீர் பெருக, நந்தினி - தரையில் கிடந்த குமாரையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள்.

இவனா... நேற்று தன் பக்கத்தில் கல்யாணப் பந்தலில் அமர்ந்து, மந்திரங்களை உச்சரித்தவன்?

இவனா... இன்று மாலை வரவேற்பின்போது சூட்டும் கோட்டுமாய் அமர்க்களமாய் நின்றவன்?

இவனை நம்பியா, அப்பா தன் பெண்ணைக் கொடுத்தார்...?

கூடத்தில் கவிந்திருந்த மெல்லிய ரோஜா மணத்தையும் மீறி மதுவின் நெடியும், அவனை தெப்பமாய் நனைத்திருந்த வாந்தி மற்றும் பிற விவகாரங்களின் நெடியும்...

திகைத்து நின்றவளின் தோளில் கை வைக்கிறாள் மரகதம்.

## 2

"நேத்து ராத்திரி சின்னவர் எப்ப வீட்டுக்கு வந்தார்."

பெரியவள் அபிராமி. கீழ் போர்ஷனில் இருக்கும் மூன்றாவது மருமகளான கீதாவிடம் மிக ரகசியமாய் கேட்கிறாள்.

"வழக்கம் போலத்தான்..."

"நிஜமாவா?"

"பின்னே பொய்யா... தெருவுல கிடந்தவரை யாரோ தூக்கிட்டு வந்து வீட்டுல போட்டாங்க."

"அந்தப் பொண்ணு அழுவே இல்லையாடி?"

"அந்தப் பொண்ணு அழுவே இல்லையாடி?"

"அவ்வளவுதான். யாரோ 'ஐயோ'-ன்னு ஒரு அலறல் கேட்டது. அவ்வளவுதான். யாரோ கதவைத் திறந்து பார்த்தாங்க. அவர் எழுந்தார். நான்தான், 'வேண்டாம்; போகாதீங்க'ன்னு தடுத்துட்டேன்."

"அது சரி... நமக்கேன் பொல்லாப்பு. இருந்தாலும் இளையராணி இப்படி செஞ்சிருக்க வேண்டாம்."

அபிராமி, தன் மாமியார் வீட்டைச் சுட்டிக்காட்டி சொல்கிறாள்.

மருமகள்கள் மூவரும் சேரும் பொழுது மாமியாரை இப்படி இளையராணி என்றோ, ராணி மங்கம்மா என்றோதான் அழைப்பார்கள். எரிச்சல் அதிகமாகும் போது 'ஊமைக் கோட்டான்' என்றோ, 'குடியக் கெடுக்க வந்தவ' என்றோ, 'சின்ன வீட்டு சிறுக்கி' என்றோ சமயம் போல் மாற்றிக் கொள்வார்கள்.

அது என்னவோ - ஆரம்பத்திலிருந்தே மரகதத்துக்கும் இவர்களுக்கும் ஒத்து வரவில்லை. பிள்ளைகள் இவளிடமிருந்து சற்று ஒதுங்கியே இருப்பார்கள். கேட்டால் 'சித்தி, சண்டைக்காரி... அவளிடம் ஒட்டவும் கூடாது; வெட்டவும் கூடாது; நாசுக்காக ஒதுங்கிப் போவதுதான் நல்லது' என்பார்கள்.

குமார் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

அவன், சித்தி, சித்தி என்று அவள் காலையே சுற்றிச் சுற்றி வருவான்.

பெரிய பிள்ளைகள், பள்ளிக்கூடத்தில் அழைத்துச் செல்லப்படும் உல்லாசப் பயணத்துக்காக ஐம்பது ரூபாய் கேட்டு, கால்கடுக்க,



கையேந்தி நின்ற நாது காலத்தில், மரகதம் - குமாரின் கைச் செலவிற்காக தினமும் ஐம்பதும் பத்துமாக வாரியிறைத்திருக்கிறாள்.

குமாரின் சின்ன வயசில் - மரகதம் அவனை ஒரு பெரிய துணையாக அழைத்துக் கொண்டு, சினிமாவுக்கும், கடைத் தெருவுக்கும் செல்வாள். பிறந்த வீட்டுக்குப் போகும் பொழுதெல்லாம், இவனும் அவளுடன் புறப்படுவான்.

"அவன் படிப்பு பாழாப் போகுதுடி..."

ராஜரத்னம் பாட்டுக்கு கத்திக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

"என் ராசாவுக்கு படிக்காமலேயே என்ன அறிவுங்கறீங்க... பள்ளிக்கூட வாத்திங்களுக்குத்தான் அவனோட புத்திசாலித்தனம் தெரியலலே. நேத்து, தியேட்டர்லே கும்பல் மூச்சு முட்டிப் போச்சு. 'ஹவுஸ் ஃபுல்' போர்டு கூட மாட்டிட்டாங்க. இவன் எப்படியோ முண்டியடிச்சுப் போய் டிக்கெட் வாங்கிட்டானே. இவன் சமத்து யாருக்கு வரும். ஊருக்குப் போகணும்னா கூட, பஸ்ஸுல சீட்டு பிடிச்சு வைக்கறது இவன்தான். படிப்பு இருந்தாப் போதுமா? பையனுக்கு பொது அறிவு வேண்டாமா...?"

மரகதத்தால், இத்தனை அருமையாக வளர்க்கப்பட்ட குமார், பி.யு.சி. வரையில் வந்ததே பெரிய விஷயம்தான்.

குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காக இரண்டாம் கல்யாணம் செய்து கொண்ட ராஜரத்னம், தனது மூத்த தாரத்தின் குழந்தைகளை, மரகதம் நடத்தும் முறைகளைத் தட்டிக் கேட்கவே பயந்தார்.

அதுவும் குமார் விஷயத்தில், அவர் கண்டுகொள்ளாமல் இருந்ததற்கு முக்கியமான காரணம் இருந்தது.

இளம் மனைவியின் மீது அவருக்கு மெல்லிய நூலிழை போல சந்தேகம் இருந்தது.

நாலாவது பிரசவத்தில் தனது மூத்த மனைவி, நோயாளியாகப் படுக்கையில் விழுந்ததுமே, மனைவியின் தேக நலனை உத்தேசித்து, அவர், மறுபடியும் குழந்தை பிறக்காமலிருக்க ரகசியமாய் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

நோயில் விழுந்த மனைவி இறந்து, அவர் - மரகதத்தை இரண்டாம் தாரமாக ஏற்றுக் கொண்டபின் இதுபற்றி அவளிடம் எப்படிப் பேசுவதென்று கூசியவராய் இதைச் சொல்லாமலேயே விட...

திருமணமான மூன்றாம் வருடத்தில் மரகதம், தான் மூன்று

மாதங்களாக முழுகாமலிருப்பதாக, ஏகப்பட்ட வெட்கத்துடன் அவரிடம் சொன்ன போது, அதிர்ந்து போய் விட்டார்.

அறுவை சிகிச்சை, ஒழுங்காக நடைபெறாவிட்டால் இதுமாதிரியான தர்ம சங்கடங்கள் எல்லாம் ஏற்படத்தான் செய்யும் என்று, தனக்குள் அவர் என்னதான் சமாதானப்படுத்திக் கொண்டாலும், உள்ளூர ஒரு உறுத்தல் இல்லாமல் இல்லை.

நல்ல வேளையாக, அந்த முறை மரகதத்துக்கு கருச்சிதைவு ஏற்பட்டு விட்டது. அதற்குப்பிறகு குழந்தைப்பேறே இல்லை.

இருந்தாலும் அவளுக்கு சிநேகிதர்கள் அதிகம். தினமும் புதுசு புதுசாய் யாரையாவது அழைத்துக் கொண்டு வருவாள்.

"இவ என்னோட அத்தை பேத்திங்க. இவளுக்கும் எனக்கும் நாலு மாசம்தான் வித்தியாசம்."

"எங்க சித்தப்பா மகன்... பார்த்த ஞாபகம் இருக்குதா... நம்ம கல்யாணத்தும்போது, திருப்பதியில் இவனுக்குத்தான் மொட்டையடிச்சு காது குத்திச்சு..."

"மாயவரம் ஜமீன் ஜம்புலிங்கம்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? எங்கே, நீங்கதான் 'பிஸினஸ், பிஸினஸ்'னு மெட்ராஸையே கட்டிட்டு அழறீங்களே. எங்கே தெரியப் போவுது. இவங்கதான் மிஸஸ் ஜம்புலிங்கம். இவரு, மிஸஸ் ஜம்புலிங்கத்தோட கஸின் பிரதர். இங்கே காஸ்மாபாலிடன் கிளப்லே மெம்பராயிருக்காங்க."

"தம்பி யாருன்னு பார்க்கறீங்களா... எங்க அம்மாவுக்கு தூரத்து உறவு... இங்கே ஏதோ கம்பெனியில 'இன்டர்வியூ'வுன்னு சொன்னான். 'இந்த சாக்குல வந்தாத்தான் வந்தது... ஒரு பத்து நாள் இருந்து, ஊரை சுத்திப் பார்த்துட்டுப் போ'ன்னு சொல்லியிருக்கேன் என்ன... நான் சொன்னது சரிதானே..."

ராஜரத்னம் எல்லாவற்றுக்கும் பெரிசாய் தலையாட்டி வைப்பார். உள்ளுக்குள் கவலை அரித்துப் பிடுங்கும்.

இந்த மாதிரி சின்ன வயசுப் பெண்ணாகப் பார்த்து இரண்டாவது திருமணம் செய்து கொண்டவர்கள், சந்தேகப்பட்டே பிராணனை விட்டு விடுவார்களோ என்னவோ?

எது எப்படியோ...

மரகதம், தான் போகுமிடங்களுக்கெல்லாம் குமாரையும் கூட அழைத்துப் போவது ராஜரத்னத்துக்கு ஒருவிதத்தில் நிம்மதியாக இருந்தது என்றே சொல்ல வேண்டும்.



சிறுவனை வைத்துக் கொண்டு எந்தவிதமான தப்பு தண்டாவும் செய்ய முடியாது என்பது அவரது கணிப்பு.

ஆனால் –

குமார், தன் சித்தியின் சகலவிதமான லீலாவினோதங்களுக்கும் துணை நின்றான்.

நாலு வயசு குமாருடன் - அவள் சினிமாவுக்குப் போவதாகக் கிளம்பி, மாயவரம் ஜமீன் ஜம்புலிங்கத்தின் மைத்துனரோடு படம் பார்ப்பாள், குமார் ஜம்புலிங்கத்தின் கார் டிரைவரோடு உட்கார்ந்திருப்பான்.

சிறுவன் அழத் தொடங்கினால் - கை நிறைய மிட்டாய்... அதற்குமேலும் அடம்பிடிப்பான் போலத் தோன்றினால் தூக்கம் வருவதற்கான மருந்து கலந்த பால்.

"குமார கண்ணா... வீட்டுல அப்பா கேட்டா என்னடா சொல்லுவே..."

"உம்.... நானும் சித்தியும் மாத்திரம் சினிமாவுக்கு போயிட்டு வந்தோம்னு சொல்லுவேன்..."

"என்தங்கம், செல்லம்... அப்பா, உங்ககூட யாரெல்லாம் வந்தாங்க?'ன்னு கேட்பாரேடா... அப்ப என்ன சொல்லுவே?"

"யாருமே வரல்லியேன்னு சொல்லுவேன்."

குமார் இப்படிச் சொல்வதற்காக, அவனுக்கு புதுசு புதுசாய் பொம்மைகளும், தின்பண்டங்களும் கிடைக்கும்.

பத்து வயசு குமாருக்கு பள்ளிக்கூடப் பாடங்களை மூளையில் திணித்துக் கொள்வதை விடவும், சித்தியின் அக்கிரமங்களுக்குத் துணை போவது ரொம்பவும் சுலபமாக இருந்தது.

சித்தியுடன் வெளியில கிளம்புவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பி - தனது முரட்டு சிநேகிதர்களுடன் சுற்றப் போவதும் அவள் வீடு திரும்பும் வரையில் கடற்கரையிலும், மட்டமான சினிமாக்களிலும் பொழுதைக் கழிப்பதும் சுவாரஸ்யமாக இருந்தது.

பதினாலு வயசில்தான் - சித்தி, எந்த மாதிரியான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறாள் என்கிற விவரம் புரிந்தது. அதே சமயத்தில், தான், அவளுக்கு எத்தனை விதங்களில் உபயோகமாக இருக்கிறோம் என்பதும் புரிய ஆரம்பித்தது.

பார்த்த சினிமாக்களும், பழகிய நண்பர்களும் அவனது மூளையை அக்கிரமமான விதத்தில் செயல்பட வைக்க...

மரகதம் கொடுக்கும் 'பாக்கெட் மணி' போதாமல், அவன், அடிக்கடி

தொந்திரவு செய்ய ஆரம்பித்தான்.

''சித்தி... ஆயிரம் ரூபா கொடுங்க...''

''ஆயிரமா...? எதுக்குடா?''

''எதுக்குன்னு சொன்னாத்தான் தருவீங்களா... ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் கேட்டுட்டிருக்க முடியுமா... இல்லே, பதில் சொல்லத்தான் முடியுமா... இப்ப, உங்க விஷயத்தையே எடுத்துக்குங்க... நான், குறுக்கே புகுந்து ஏதாவது விசாரிச்சிருக்கேனா? அதெல்லாம் நாகரீகமாகப் போகணும்.''

''உங்க அப்பாவைக் கேட்காம, என்னால அவ்வளவு பணம் எடுக்க முடியாதுடா ராஜா...''

''ஆங்... இந்தக் கதையெல்லாம்தானே வேண்டாம்கறேன். உங்ககூட இத்தனை வருஷமா இருக்கேன். எனக்கே காது குத்தறீங்களே... உங்க செலவுக்குப் பணம் வாங்கறப்ப, எனக்கும் சேர்த்து வாங்குங்க.''

''ஏற்கெனவே, உன்னைக் கெடுத்து குட்டிச்சுவராக்கிட்டேன்னு உங்க அப்பா புலம்பறாரு.''

''நிஜம்தானே... கெட்டது கெட்டாச்சு. இனிமே அதை நினைச்சு வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்... அப்பாகிட்ட பணம் கேட்க கஷ்டமாயிருந்தா - உங்க ஃபிரண்டு - அதான் அந்த ஜம்புலிங்கத்தோட மச்சினன் - அவனைக் கேட்டுப் பணம் வாங்கித்தாங்க.''

பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கின் நிலைமை மாகதத்துக்கு...

அவன் கேட்கும் பொழுதெல்லாம் பணம் கொடுத்தாள். கணவர், அவனை அழைத்துக் கண்டிக்கும்பொழுதெல்லாம், 'குழந்தை, குழந்தை' என்று பரிந்து பேசினாள்.

குமாரின் மூத்த சகோதரர்கள் படிப்பைத் தொடர சின்னம்மா அனுமதிக்காத நிலையில் - தகப்பனாரின் வியாபாரத்திலேயே தாங்களும் ஈடுபட்டு, 'மளமள'வென முன்னுக்கு வர...

குமார் மாத்திரம் யாருக்கும் அடங்காத பொலி காளையாக வளைய வர...

ராஜரத்னம் இவனுக்காகவே - பயந்து, மாகதத்தின் பெயரிலுள்ள சொத்துக்களை எல்லாம் தனது மேற்பார்வையில் வைத்துக் கொள்ள...

முதல் முறையாக - கைச் செலவுக்குப் பணம் இல்லாத நிலையில் மாகதம், தனது மூத்த மருமகளின் இருபது பவுன் சங்கிலியைத் திருடி,



குமாரின் கையில் கொடுத்தாள்.

அப்படி கொடுக்கும் பொழுதே துக்கம் தொண்டையை அடைத்தது மாகதத்துக்கு.

''உன்னால நான் திருட்டுப் பட்டம் கட்டிக்க வேண்டியிருக்கு. புதுசா வந்தவ, என்னை நாலு பேர் முன்னால அவமானப்படுத்தப்போறா... கருமம், கருமம்...''

குமார், கிருஷ்ண பரமாத்மா மாதிரி அபயஹஸ்தம் காண்பித்தான்.

''எதுவானாலும் பழிய என்மேலப் போடுங்க... நகைய எடுத்துக் கொடுத்ததோட உங்க வேலை தீர்ந்தது...''

புதுசாய் வந்த மருமகள் அபிராமி, நகையைக் காணோமென்று அழுதபடி, தன் கணவனிடம் வந்து நின்ற போது...

அவன், இந்த வழக்கைத் தன் தகப்பனிடம் எடுத்துப் போக...

மாகதம், கணவனின் முன்னால அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாள்.

''நல்லா தேடிப் பார்த்தியா... இருபது பவுன் சங்கிலியெல்லாம் எங்க வீட்டுல தூடப்பக்குச்சிக்கு சமம்டீ... யாரும் எடுக்க மாட்டாங்க. எங்க, இடிச்ச புளி கணக்கா உட்கார்ந்துட்டிருக்கீங்களே... எடுத்துச் சொல்லுங்களேன், உங்க மருமககிட்ட... நான் பொறந்த வீட்டுல இருந்து நூறு பவுன் நகை கொண்டு வந்தவ... எங்க வீட்டு வேலைக்காரி கல்யாணத்துக்கே, அஞ்சு பவுன், பத்து பவுன்னு மொய் எழுதறவ நான்...''

''இப்ப, உன்னையா திருடின்னு சொன்னாங்க? அதுக்குள்ள ஏன் அழுது ஆர்ப்பாட்டம் பண்றே?''

''அப்படியா...? இந்த வீட்டுல எல்லாத்துக்கும் பொறுப்பு யாரு...? நான்தானே? பொறுப்பை சுமந்து சுமந்துதானே நாப்பது வயசுக்குள்ளேயே என் தலை 'பொல்'லுனு நரைச்சுப் போச்சு.. இத்தனை பேசறாளே, உங்க மருமக... சங்கிலிய பொறந்த வீட்டுலேயே விட்டுட்டு வந்திருக்கலாம் இல்லே. 'நான் போடற மாதிரி சபையில போடறேன். நீ தொலைஞ்ச மாதிரி, அழுது ஒப்பாரி வையி'ன்னு இவ அப்பன்காரன் சொல்லிக் கொடுத்திருக்கலாம் இல்லே?''

அபிராமி, புது மருமகளுக்கே உரிய அச்சத்துடன் அதுநேரம் வரையில் ஒதுங்கியிருந்தவள் இதைக் கேட்டதும் பெண் புலியாய்

சிரித்த கொண்டு முன்னால் வந்து நின்றாள்.

''அய்யோ, அய்யோ, அய்யோ... நீங்க நல்லாயிருப்பீங்களா... முழும் முழுமா நீங்க கொடுதத பட்டியல்லே எதுவும் பாக்கியில்லாம எங்க அப்பா செஞ்சதுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். எங்க, எல்லாத்தையும் கேட்டுட்டு சும்மா நிக்கறீங்களோ... இனிமே ஒரு நிமிஷம் கூட இந்த வீட்டுல சேர்ந்து இருக்க மாட்டேன். தனிக்குடித்தனம் வச்சா வரேன்... இல்லாட்டி எங்க அப்பா வீட்டுக்கே போறேன்.''

ராஜரத்னம் அந்த நிமிடமே தீர்மானித்து விட்டார் - மூத்த மகனை மாடியில் தனியாகக் குடித்தனம் வைப்பதென்று...

அது மட்டுமல்ல.

அடுத்து வந்த இரு மருமகள்களையுமே - வந்தவுடன் தனி போர்ஷன் பார்த்து வைத்தார்.

என்னதான் குமாரிடம் மரகதத்துக்கு வெறுப்பு வளர்ந்து கொழுந்து விட்டெரிந்தாலும், அவன் செய்கிற எந்த அக்கிரமத்தையும் தட்டிக் கேட்கவும் முடியவில்லை; காட்டிக் கொடுக்கவும் முடியவில்லை.

மருமகள்கள் தனியாய் குடித்தனம் போட்டதில் அவளுக்குத் தான் ஏகப்பட்ட கஷ்டம்.

குமார் கேட்கும்பொழுதெல்லாம் அவள்தானே பணத்தை சமாளித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது?

ராஜரத்னம் பண விஷயத்தில் மாத்திரம் மகா கெட்டியாக இருந்தார்.

''இந்தா குமாரோட பங்கு மாசம் பத்தாயிரம் ரூபா... அதுல அஞ்சாயிரம்தான் அவனோட கைச் செலவுக்கு தருவேன். மீதி அஞ்சாயிரம், இவன் குடிச்சுட்டு தகராறு பண்ற இடங்கள்லே போலீஸ் கேஸ் வராம பார்த்துக்கவும், இவனால கெடுக்கப்பட்ட பொண்ணுங்களுக்கு வாய்க்கரிசி போட்டுச் சமாளிக்கவும், கண்ட இடத்துல விழுந்து கிடக்கிறவனை வீட்டுக்கு கொண்டாந்து போடறவங்களுக்கு சன்மானம் கொடுக்கவுமே போதமாட்டேங்குது. அஞ்சாயிரத்துக்கு மேல, ஒத்தை பைசா தரமாட்டேன். வேணுமானா, உன் கைப்பணத்துல இருந்து உன் செல்லப் பிள்ளைக்கு கொடுத்துக்க.''

மரகதம், தன் கைச் செலவுக்கே பணம் போதாத நிலையில், அவ்வப்பொழுது மாடி வீட்டு மூத்த மருமகளின் கைக்குழந்தையுடைய இடுப்பு சங்கிலி, கழுத்து நகைச் இல்லாவிட்டால் வெள்ளித்



தட்டு, கீழ வீட்டிலுள்ள இரண்டாவது, மூன்றாவது மருமகள்கள் கவனக் குறைவாக, எண்ணெய் குளியலுக்காகக் கழற்றி வைத்த வைரத்தோடு, மோதிரம் இவைகளை துளியும் சந்தேகம் வராதபடி லாவிக் கொண்டு வருவாள்.

இதனால், அந்தந்த வீட்டு வேலைக்காரிகள் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு - அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இத்தனையையும் பார்த்துக் கொண்டு, 'கம்'மென்று உட்கார்ந்திருப்பாள் மரகதம்.

குமாரிடம் மாத்திரம் தனிமையில் புலம்புவாள்.

''எனிக்கு மாட்டிக்கப் போறோமோ தெரியலை. உனக்கென்ன, முழுக்க நனைஞ்சாச்சு. உன்னால, என் மானமும் இல்லே சேர்ந்து பறிபோகப் போறது.''

இந்த நிலையில்தான் ஒருநாள் - குமார், குடிபோதையில் அண்ணனின் காரை எடுத்துக் கொண்டு போய், ஏதோ ஒரு குட்டிச் சுவரில் மோதி, நசுங்கின வண்டியை, கார் புரோக்கர் மூலமாய் வந்த விலைக்கு விற்று, ஒரு வாரம் பெங்களூரில் டேரா போட்டுவிட்டு வந்தான்.

அண்ணன்கள் மூவரும் இவனை நொறுக்கிப் போடாத குறையாக அடித்தார்கள்.

அண்ணிகள், காறித் துப்பாத குறையாகத் தூற்றினார்கள்.

இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, மரகதம் கணவரிடம், குமாரின் கல்யாணப் பேச்சை எடுத்தாள்.

''அவனுக்குன்னு ஒரு குடும்பம், பெண்டாட்டின்னு வந்துட்டா, திருந்திடுவானனு தோணுதுங்க.''

''மூதேவி, அவனுக்கு கொடுக்கற இடமெல்லாம் கொடுத்திட்டு, இப்ப, இவனை நம்பிப் பொண்ணு கேட்கச் சொல்றியா... எவன் தருவான். அந்தப் பாவத்தைப் பண்றதுக்கு, நாலாவது பிள்ளை எப்பவோ செத்துட்டான்னு கருமம் பண்ணி, தலைமுழுகத் தயாரா இருக்கேன்டி நான்...''

''நீங்க தலைமுழுகத் தயாரா இருக்கீங்க. ஆனா, அவன் தயாரா இல்லையே. நம்ம ரெண்டு பேர் ரத்தத்தையும் ஒட்ட உறிஞ்சிட்டுத்தான் போவான் போல இருக்கு.''

''அதுக்காக இன்னொரு பொண்ணோட வாழ்க்கையை வேற பாழாக்கணும்கறியா...''

மரகதம் மௌனம் சாதித்தாள்.

அவனது திட்டமே அதுதானே...

இனிமேலும் அவனால், யானையைக் கட்டித் தீனி போடுவது போல, குமாரை உட்கார வைத்து சாந்தி ரோட்டுக்களால அபிஷேகம் பண்ண முடியாது. எதோ ஒரு காலத்தில், இளமை வேகத்தில நான் செய்த தவறுகளுக்கெல்லாம் காலம் முழுக்க இத்தனை பெரிய தண்டனையை அனுபவிக்க முடியாது.

போதும், பட்ட கஷ்டமெல்லாம் போதும்.

இனிமேல், எவளோ ஒருத்தி வந்து, இவனுடன் போராடட்டும். எப்படியிருந்தாலும் தாலி கட்டியவளுக்கு, புருஷனை விட்டுக் கொடுக்க முடியாது.

பணமோ, காசோ... அவளைக் கேட்கட்டும். அவள் தரட்டும்... அவளிடம் இல்லையென்றால், பிறந்த வீட்டில் கேட்டு வாங்கட்டும்.

கல்யாணம் முடியற மட்டுமாவது இவன், நம்ம மானத்தை காப்பாத்தட்டும் போதும்.

குமார் எப்படிப்பட்டவன் என்பது, இவனது அண்ணன் சிவராமிற்கு பெண் கொடுத்த மனிதருக்கு தெரிந்திருந்தும் - அவர் தனது நண்பரான நந்தினியின் தகப்பனாரிடம் மூடி மறைத்ததற்கு காரணம்... அவரது மாப்பிள்ளை சிவராமின் வேண்டுகோள்தான்.

''கல்யாணமானா எல்லாம் சரியாப் போயிடும்னு ஜோசியர் சொல்லியிருக்கார் மாமா... குமாருக்கு பார்த்திருக்கற பொண்ணோட அப்பா, உங்களுக்குத் தெரிஞ்சவர்னு கேள்விப்பட்டேன். அவர்கிட்ட எதுவும் சொல்லிடாதீங்க...''

அவரும் பலமாகத் தலையசைத்தார்.

''ஆமாமா... ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைப் பண்ணணும்னு பெரியவங்க சொல்லுவாங்க.''

குழந்தைகள் வட்ட வடிவமாக நின்று கையிலுள்ள பொட்டலத்தை, இசைத்தட்டின் வேகத்துக்கு ஏற்ப, தூக்கிப் போட்டு விளையாடுவது போல...

ஒவ்வொருவருக்கும் குமார், தங்களை தொந்தரவு செய்யக் கூடாது என்பதில் இருந்த அக்கறை, புதுசாய் இந்தக் குடும்பத்தில் சிக்கிக் கொண்ட இளம்பெண்ணின் மீதில்லை.

நந்தினி, குமார் என்கிற - தம்பிடிக்கு உபயோகமில்லாத மனிதப் பொட்டலத்தை தன் கையில் வாங்கிக் கொண்டு, மலங்க மலங்க விழிக்கிறாள்.



## 3

**வி**ம்மியழும் நந்தினியை, தன் தோளில் சாய்த்துக் கொள்கிறாள் மரகதம்...

''முத்தப்பா...''

உட்பக்கம் நோக்கி குரல் கொடுக்கிறாள்...

''அம்மா...''

அங்கு பணிவுடன் வந்து நின்ற வேலைக்காரனிடம் குமாரை சுத்தம் செய்து, படுக்கையில் போடும்படி சொல்லிவிட்டு, நந்தினியை அழைத்துக்கொண்டு, அவர்களது போர்ஷனுக்குப் போகிறாள்...

அப்பாவும், அண்ணாவுமாய் பார்த்துப் பார்த்து வாங்கிப் போட்ட கட்டிலில், குமார் அலங்கோலமாய் படுத்துக் கிடக்கும் காட்சியையே கண் கொட்டாமல் பார்த்தபடி நந்தினி...

அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் வீட்டில் பழகும் எந்த ஆண்பிள்ளையுமே குடித்து, அவள் பார்த்ததில்லை...

கல்லூரி நாட்களில் - மாலை நேரத்தில் பொழுது போக்காக, பாட்டு கற்றுக் கொள்ள அவள் ஆசைப் பட்டபோது...

பாட்டு வகுப்பிற்குப் போகும் வழியில், சாராயக் கடை இருப்பதால, அவளை வகுப்பிற்குக் கொண்டு போய் விட்டு, அழைத்து வர அப்பாவோ, அண்ணாவோ அவள் கூட வருவார்கள், அப்படியும், அந்தக் கடையைத் தாண்டும்பொழுது ஒருவித பயத்துடன், பின்னங்கால் பிடரியில் இடிக்க ஓடுவாள் நந்தினி...

அப்பேர்ப்பட்டவளுக்கு இந்தக்காட்சி, அடி வயிறு வரையில் ஈட்டியாய் பாய்ந்ததில் வியப்பில்லை.

''நந்தினி...''

மரகதம், குரலைக் குழைத்தபடி சொல்கிறாள்:

''என் பிள்ளைகளிலேயே குமாரைப்போல, நல்லவன், உத்தமன் கிடையாது. என்ன செய்யறது... யார் செஞ்ச பாவமோ, எங்கேயிருந்தோ, அவனுக்கு இந்தப் பழக்கம் மட்டும் பேயாப் பிடிச்சிடுத்து. நீ படிச்சவ; புத்திசாலி... நீதான் கொஞ்ச கொஞ்சமா அவனை இந்தப் பழக்கத்துலேயிருந்து மாத்தணும்...

இப்ப பேசாம படுத்து தூங்கு. விடிஞ்சதும், அவனே தான் இப்படி நடந்துகிட்டதுக்காக 'ஓ'ன்னு புலம்புவான் பாரு... உனக்கு

எதுவானாலும் நான் இருக்கேன்...''

மரகதம், இதைச் சொல்லியபடியே அங்கு பரப்பி வைக்கப்பட்டிருந்த பண்டம், பாத்திரங்களை ஒரு பார்வை பார்க்கிறாள்...

''அம்மாடி...''

அவள், திரும்பவும் நந்தினியைப் பார்த்து, கனிவுடன் அழைக்கிறாள்.

''நீ சின்னவ, அதனால சொல்றேன். இந்த வீட்டுல நாலு குடும்பம் இருக்கு. நீ அஞ்சாவது குடும்பம்... பெரியவ வீட்டு வேலைக்காரிய அடுத்தவ சிந்தமாட்டா.. தனக்குன்னு வேற ஒருத்திய ஏற்பாடு பண்ணிப்பா... இதனால, தினமும் பொழுது விடிஞ்சா ஒவ்வொருத்தி சண்டையையும் தீர்த்து வைக்கத்தான் எனக்கு நேரம் சரியா இருக்கும்... போதாக்குறைக்கு போன மாசம் பெரியவ, தன் வீட்டு ஹால்லே வெள்ளித் தம்ளரைக் காணோம்னு கத்திட்டிருந்தா... காலம் கிடக்கற கிடப்புல வெள்ளித் தம்ளரை எதுக்காக எடுத்து வெளியே போடணும்? அவளுக்கு எப்பவுமே, நான் பெரிய இடத்துப் பொண்ணுங்கற மண்டை கனம் அதிகம்... அதான் அனுபவிக்கிறா... தம்ளரை காணோம்னு மூணாவது மருமக வீட்டு வேலைக்காரிக்கும் அவளுக்கும் பழி சண்டை....''

நந்தினி, அவளது வார்த்தைகளை கிரகிக்கும் நிலையில் இல்லை.. குமாரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''அதனால நீ என்ன பண்ணு... எந்த சாமானையும் எடுத்து வெளியில போடாதே.. இரும்பு பீரோவுல வச்சு பூட்டு. பீரோ புதுசுதானே... ரெண்டு சாவி கொடுத்திருப்பாங்களே... ஒரு சாவியை நீ வச்சுக்க. இன்னொரு சாவிய என்கிட்ட கொடுத்து வையி.''

மரகதம், டிரஸ்ஸிங் டேபிள் மீது கிடந்த இரும்பு பீரோ சாவிக் கொத்திலிருந்து, ஒற்றை சாவியை உருவிக் கொள்கிறாள்.

''படுத்துத் தூங்கு. அவன் எழுந்திருக்க காலையில பத்து மணிக்கு மேல் ஆகும்...''

வெளியே வந்த மரகதம் நிம்மதியாய் மூச்சு விடுகிறாள்.

'அம்மாடி.. இனிமே இவனுக்காக நான் ராத்தூக்கம் முழிக்க வேண்டியதில்லே. இவன் கேட்கறப்ப எல்லாம் பணத்துக்கு என்ன செய்யறதுன்னு கவலைப்பட வேண்டியதில்லே... அதான் வந்திருக்காளே ஒருத்தி - பார்த்துக்கட்டும்...'



மறுநாள்...

பொது வீட்டு ஊஞ்சலில் அமர்ந்தவாறு நந்தினியைக் கூப்பிடுகிறாள் மரகதம்..

இந்த கூடத்து ஊஞ்சலில் அமர்ந்தால் - நாலு போர்ஷனையும் கண்காணிக்க முடியும் அவளால். அதே போல நாலு போர்ஷனிலிருந்தும் மற்றவர்கள் இவளை, இவளது பேச்சை கவனிக்க முடியும்.

மூன்று மருமகள்களிடமிருந்தும் கிடைக்காத மரியாதையை, இவள் - நந்தினியிடம் எதிர்பார்ப்பதில் என்ன வியப்பு இருக்க முடியும்...தன்னெதிரில வந்து நின்ற புது மருமகளை ஏற இறங்கப் பார்க்கிறாள் மரகதம்.

''குளிச்சுட்டியா?''

''உம்...''

''ராத்திரி முழுக்க அழுதியா... கண் ரெண்டும் சிவந்து கிடக்கு..''

''.....''

''சமையலை ஆரம்பிச்சுட்டியா?''

''இன்னும் இல்லே...''

''ஒரு கரண்டி பாயசத்தை வச்சுட்டு சமைக்க ஆரம்பி... என்ன, புரியுதா.... இப்பத்தான் முத முதல்லே சமைக்க ஆரம்பிக்கறே... இனிப்போட ஆரம்பி...''

நந்தினி, இதைக் கேட்ட பின்பும் மரமாய் நிற்கிறாள்...

''என்ன வேணும்.. சமைக்கத் தெரியுமா, இல்லையா..?''

''சமைக்கத் தெரியும்... ஆனா... இப்ப... இப்ப முடியாது... எனக்கு எங்க அம்மா, அப்பாவைப் பார்க்கணும்... இப்பவே...''

''என்னடி இது கூத்து... இரு, இரு, எதுக்காக இப்ப அழறே... அடடே.... கண்ணைத் துடைம்மா...''

மரகதம், தன் ஸ்தூல சரீரத்தை தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு, அவளருகில் வந்து, அவளை அணைத்துக் கொள்கிறாள்...

''இங்கே பாரு. எல்லா விரலும் ஒரே மாதிரியாவா இருக்கு? குமார் குடிக்கறான்கறதைத் தவிர - அவன்கிட்ட வேற எந்த கெட்ட பழக்கமும் கிடையாது... அதுக்கென்ன, இந்த வீட்டு மருமகளுங்களுக்கு அவனைக் கண்டாலே ஆகாது.. அவனையும் நல்லபடியா வாழ வைக்கறதா நான் சபதமெடுத்திருக்கேன்... உள்ளே வா. நான், உனக்கு

ஒத்தாசை செய்யறேன்... சமையலை முடிப்போம். அவன் எழுந்திருக்கட்டும். நான் புத்தி சொல்றேன்...அசடு. இதுக்காக இப்ப பிறந்த வீட்டுக்குப் போவாங்களா...''

அன்று முழுக்க மரகதம், அவளுடன் தான் தங்குகிறாள். அவளது சாமான்களை எடுத்து வைத்து ஒழுங்கு படுத்துகிறாள். பகல் பதினொரு மணி சுமாருக்கு கண்கள் கொள்ளிக்கட்டையாய் சிவக்க - குமார் எழுந்து உட்காருகிறான்...

''அத்தை...அத்தை...''

நந்தினி, சமையலறையில் முந்திரிப் பருப்பு பாட்டிலைக் குடைந்து கொண்டிருந்த மரகதத்தின் தோளைத் தொட்டு, உலுக்குகிறாள்...

''என்ன... முந்திரிப் பருப்பு எங்கே வாங்கினாங்க உங்க அம்மா... நல்லாவே இல்லே... முந்திரி வாங்கணும்னா திருசூர்லே வாங்கணும்...''

அவள் நிதானமாய் திரும்பிப் பார்க்கிறாள்...

''அவர் எழுந்துட்டாரு... பார்க்க பயமா இருக்கு அத்தை... நீங்க வாங்க...''

''இதோ வர்றேன்!''

மரகதம், முந்திரிப் பருப்பு பாட்டிலை மனசில்லாமல் தரையில் வைத்து விட்டு எழுந்து வருகிறாள்...

''ஏண்டா... கல்யாணமான மறுநாளே இப்படி செஞ்சு, என் முகத்துல கரிய வாரிப் பூசிட்டியே... அந்தப் பொண்ணுக்கு நான் என்ன பதிலைச் சொல்வேன்... தெருவுல விழுந்து கிடந்தியாமேடா... லாரி, பஸ் ஏதாவது அரைச்சுட்டுப் போயிருந்தா அந்தப் பொண்ணோட கதி என்ன... கல்யாணமான மறுநாளே தாலியறுத்து....''

''அத்தை!''

நந்தினி, கைகளால் கண்களை இறுகப் பொத்தியபடி, வாய்விட்டு அலறுகிறாள்.

மரகதத்தின் முகத்தில் மெல்லிய முறுவல் படருகிறது.

'பரவாயில்லை.. பெண், இன்னமும் அந்தக் காலத்து கற்புக்கரசிகளின் வழியில் வந்தவளாகத்தான் இருக்கிறாள்.'

'இன்னும் கொஞ்ச நாளைக்காவது, இவளை - இந்த வார்த்தையை வைத்தே மேய்க்கலாம்...'



அவள், நந்தினியை இறுக அணைத்துக் கொள்கிறாள்.

''நெருப்புன்னு சொன்னா, வாய் வெந்துறாதுடி குழந்தை... ஒவ்வொரு நாளும் இவன் வீடு திரும்ப நேரமாகறப்ப எல்லாம், நானில்லே வயித்துல நெருப்பைக் கட்டிட்டிருக்கேன் - இத்தனை நாளும். இவனுக்கு ஏதாவது ஒண்ணு ஆயிடுச்சின்னா - வயசானவங்க, எங்க துக்கத்தோட போகும். இப்ப, இதுல உன் வாழ்க்கையும் இல்லே இணைஞ்சிருக்கு... அட, எங்களுக்காக இல்லாட்டாலும், இவன் - உனக்காகவாவது பொறுப்பா நடந்துக்கணும் இல்லையா...''

இத்தனைக்கும் குமார், ஆடாமல், அசையாமல் உட்கார்ந்திருக்கிறான்.

புதுசாய் வந்துள்ள பெண்ணின் எதிரில், சித்தி இப்படியெல்லாம் பேசுவது - எங்கோ குத்தத்தான் செய்கிறது.

இது மாதிரி, கல்யாணம் கால்கட்டு போன்ற பந்தங்களில் எல்லாம் சிக்கிக் கொள்ள, ஆரம்பத்தில் அவனுக்கு விருப்பமில்லை தான்.

அவன் பார்க்காத பெண்ணா?

முதலில், கல்யாணமே வேண்டாமென ஒரே பிடியாக இருந்தவனைக் கரைத்ததே மரகதம்தான்.

''இந்தாடா... ஒரு நாளைப் போல ரெண்டு மணிக்கும், மூணு மணிக்கும் நடு நிசி நேரத்துல வந்து கதவைத் தட்டறே... வயசான காலத்துல, சாவியத் தூக்கிட்டு, பின்வீட்டுலேயிருந்து ஓடி வர என்னால முடியல்லே... பெண்டாட்டின்னு ஒருத்தி இருந்தா - உனக்காகக் கதவைத் திறந்துவிடக் காத்திட்டிருப்பா இல்லையா?''

''அதுக்குப் பெண்டாட்டிதான் வேணும்கறதில்லே... முத்தப்பாவுக்கு அம்பது ரூபா சம்பளத்தை மேலே கொடுத்தா, அவன் வந்து திறந்துட்டுப் போறான்...''

''சொல்லுவியே... பெரிய ஜமீன் பரம்பரையில வந்தவராச்சே... சொல்ல மாட்டியா... இப்பவே நீ கேட்கறப்ப எல்லாம், ஊரான் வீட்டு சொத்துல நான் கைய வைக்கறேன்...''

''ஏன், என் பங்குக்கு பத்தாயிரம் ரூபா வரணும் இல்லே... அஞ்சாயிரம் ரூபாதான் உங்க புருஷன் 'எனக்குத் தரார்... மீதி ரூபாயையும் எடுத்து வைக்க சொல்லுங்க. அது மட்டுமில்லே... அவர்கிட்ட சொல்லி சொத்தை நாலு பிள்ளைகளுக்கும் சமமா பங்கு

போட்டுத்தரச் சொல்லுங்க...''

இதை, மரகதம் தன் கணவரிடம் சொன்னபோது, அவர் எகிறிக் குதித்தார்...

''இத்தனையும் சும்மா வரல்லைடி... எல்லாம் நான் உழைச்சு சம்பாதிச்சது.. இவனுக்காக நான், இப்பவே சொத்தைப் பிரிக்க மாட்டேன்... எனக்கு எப்ப தோணுதோ, அப்பத்தான் பாகம் போடுவேன்... அது மட்டுமில்லே... இவன் இப்படியே குடிச்சு, ஊரைச் சுத்திட்டிருந்தான்... இவன் பங்கு சொத்தை அப்படியே கோவிலுக்கு எழுதி வச்சிடுவேன்... ஒத்தை பைசா தரமாட்டேன்...''

ராஜரத்னம் சொன்னபடி செய்யக் கூடியவர்தான். அவர், பெண்டாட்டிக்கு அடங்கிப்போகிற ரகமாக இருந்தாலும்கூட, பிள்ளைகள் விஷயத்தில், யார் பேச்சையும் கேட்பதாக இல்லை...

மரகதம், கணவர் சொன்ன வார்த்தைகளைக் கருவியாக்கித்தான், குமாரை திருமணத்துக்கு சம்மதிக்க வைத்தாள்.

''புரியாத பிள்ளையா இருக்கியே... வெறுமே குடிச்சுட்டு, கோவில் காளை மாதிரி ஊரை சுத்திட்டிருந்தா சொத்துல ஒரு நயா பைசா கிடைக்காது. அதுக்கு எவ கழுத்துலேயாவது தாலியக் கட்டினியானா அவ வழியில வரவேண்டிய பொருளும் வரும். நாளைக்கு, அவ வயித்துல ஒரு பூச்சி பொட்டு உதிச்சதுன்னா அதைக் காமிச்சு, உங்க அப்பா கிட்டேயிருந்து சொத்தை வாங்கலாம்... புரியுதா...''

''அது சரி... என்னைப் பத்தி, பொண்ணு வீட்டுககாரங்ககிட்ட, உங்க புருஷனே சொல்லிடுவாரே... அப்புறம் எவன் பொண்ணைக் கொடுப்பான்..?''

மரகதம், நாசூக்காகத் தலையில் அடித்துக்கொண்டு சிரித்தாள்.

''அடேய்.. கால நிலவரம் புரியாத பிள்ளையா இருக்கியேடா.... இந்தக் காலத்துல மலை மலையா வளர்த்த பொண்ணுங்களை எவன் கிட்டயாவது, மானமா இழுத்து விட்டாப் போதும்னு பொண்ணைப் பெத்தவங்க துடிச்சுட்டு இருக்காங்கடா... கல்யாணமாகாத பொண்ணுங்களை வீட்டோட வச்சுக்கறதைவிட, நொண்டியோ, முடமோ, கிழவனோ, குடிகாரனோ கிடைச்சாப் போதும்னு தபஸ் கிடக்கறவங்களைப் பத்தி உனக்குத் தெரியாதுடா... ஆனா, எனக்குத் தெரியும்...''

''சரி, சரி... எதையோ ஒண்ணை பார்த்து முடி... நாளைக்கு அவளும் வந்து, ஒரு பக்கமா நின்னுட்டு, என்னைத் திட்டித் தீர்க்கட்டும்...''



குமார் பச்சைக்கொடி காட்டியபின்னர்தான் மரகதம் அவனது ஜாதகத்தையே கையில் எடுத்தாள்...

துருவித் துருவி ஆராய்ந்து, வம்பு தும்புக்குப் போகாத, சாதுவான குடும்பத்தைச் சேர்ந்த, வாயில்லாப் பூச்சியான நந்தினியைத் தேர்ந்தெடுத்தாள்...

திருமணம் நிச்சயமானதுமே, மருமகள்களை அழைத்து, ஒரு பாட்டம் ஒப்பாரி வைத்தாள்..

''ஆயிரம்தான் அவன் கெட்டலைஞ்சாலும், தாயார் ஸ்தானத்துல இருக்கற நான், என் கடமையை செஞ்சுதான் ஆகணும்.... யாரு கண்டது... இப்ப, இப்படியிருக்கறவன், கல்யாணமானவுடனே பொறுப்பா மாறினாலும் மாறலாம்... இப்படி கண்மண் தெரியாம சுத்தறவனுக்கு ஒரு கடிவாளம் போடணும்னு நான் துடிக்கிறேன்... உங்க மாமனார் என்னடான்னா, 'குடிகாரப் பிள்ளைக்கு ஒரு பொண்ணைப் பலி கொடுக்கப் போறியா'-ன்னு கேட்கிறார்.... நல்லவங்களுக்குக் காலமில்லே. அவ்வளவுதான் நான் சொல்வேன்.. இதுவே, என் இடத்துல இன்னொருத்தி இருந்திருந்தா - இந்த மாதிரி குடும்பத்தை அரவணைச்சுக் கொண்டு போயிருப்பாளா.... இந்நேரத்துக்கு பெரிய மனுஷன் ராஜரத்னத்தும் குடும்பம் நாத்தமா நாறி, சீலைப் பேன் குத்தியிருக்கும்... உங்க எல்லாரையும் கையெடுத்துக் கும்பிடாத குறையா கேட்டுக்கறேன்; கல்யாணம் முடியற மட்டும், உங்களுக்கு பிடிக்கறதோ இல்லையோ... என்கூட ஒத்துழைச்சாப் போதும். உங்ககிட்ட இதான் நான் கேட்டுக்கறது...''

மற்றவர்கள் வாயைத் திறக்கவில்லை என்றாலும், மூத்தவள் அபிராமி, 'நறுக்'கெனச் சொல்கிறாள்:

''எங்களுக்கென்ன... வம்பா - உங்க கூட சண்டை போடணும்னு.. செல்லம் கொடுத்து வளர்த்த பிள்ளை, இன்னிக்கு, தன் பொருள் எது, அண்ணன் பொருள் எதுன்னு துளிகூட கவலைப்படாம, எல்லாத்தையும் திருடறான்... கண்டிச்சு கேட்க துப்பு இல்லையின்னா - கேட்க மாட்டோமா.... என்ன செய்வீங்களோ, எது செய்வீங்களோ - எனக்குத்தெரியாது... எங்க வீட்டுக்காரர் காரை எடுத்திட்டுப் போய் உடைச்சு வித்ததுக்கு ஒரு லட்ச ரூபாயாவது உங்க பிள்ளை தந்துதான் ஆகணும். அதை சம்பந்தி வீட்டார் கிட்ட பணமாத்தான் கேட்பீங்களோ இல்லை, வரப்போற பொண்ணு போட்டிருக்கற நகையைத்தான் விற்பீங்களோ... பணம் கைக்கு வந்து சேர்ந்தாகணும்...''

மரகதம், மூக்கை உறிஞ்சியபடி அவளை முறைத்தாள்.

''இதை என் என்கிட்ட சொல்றே? அவன்கிட்டயே சொல்லு. நானும், உன்னை மாதிரி, இந்த வீட்டுக்கு மருமகளா வந்தவதான்... அவனுக்கு ஒரு கல்யாணம் ஆகணும்னா உங்களுக்குத்தான் நல்லது... சின்னவ வீட்டுல லைட்டு அணைஞ்சதுக்கு அப்புறமா, இவன், படுக்கையறை வெண்டிலேட்டர் வழியா உள்ளாரப் பார்த்துட்டிருந்தான்... உனக்குத் தெரியுமா... இல்லை, அவனுக்குத்தான் தெரியுமான்னு கேட்டுப்பாரு...''

''ஐயோ!''

கடைசி மருமகள் கீதா, விக்கித்துப் போய் நெஞ்சில கை வைத்து நின்று விட்டாள்....

மரகதம் தொடர்ந்தாள்.

''அது மட்டுமில்லே... ரெண்டாமவ, அண்ணிக்கு குழந்தைக்கு பால் கொடுத்தபடியே - அவ வீட்டு சோபாவுல சாஞ்சுட்டு காடாந்தகாரமா தூங்கிட்டிருந்தா... உண்டா? இல்லையான்னு கேட்டுப்பாருங்க... இவன் என்னடான்னா, இவ வீட்டு நிலைப்படிய பிடிச்சிட்டு வெறிச்சுப் பார்த்துட்டிருந்தான்... நான்தான் போய், அவனைக் கீழே இழுத்துட்டு வந்தேன்...''

''.......''

''இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நான் இப்படி ஓடி ஓடி கவனிக்க முடியும்? இவனுக்குன்னு ஒருத்தி வந்தா இல்லே - என் சங்கடமும் தீரும்...''

அதற்கு மேலும் பேச, அந்தப் பெண்களுக்குப் பைத்தியமா என்ன...

பெண் வீட்டுக்காரர்களிடம், மரகதம், ஐம்பதாயிரம் ரூபாய் வரதட்சணை வாங்கினபோதும் சரி, தங்கமும், வெள்ளியும், இத்தனையித்தனை கிலோ இருக்க வேண்டுமெனப் பட்டியல் போட்ட போதும் சரி... இவர்கள் வாயை, பசை போட்டு ஒட்டிக்கொண்டனர்.

நந்தினியைப் பார்த்தபோது மட்டும், கீதா, பெரியவள் அபிராமியிடம் சொன்னாள்.

''பொண்ணைப் பார்க்கப் பாவமாயிருக்கு அண்ணி...''

''உம்... பேசாம இரு... அந்த லங்கிணி காதுல விழுந்துடப் போகுது-



அப்புறம், அவகிட்ட வாய் கொடுத்து ஜெயிக்க முடியாது...''

எது எப்படியோ...

இப்பொழுது ஒன்றுமே அறியாத நந்தினி, இந்த சிறையில் வந்து சிக்கிக் கொண்டிருக்கிறாள்...

''இந்தா, குமார... என்னோட வா. உன்கிட்டப் பேசணும்கறேன்...''

இப்படிச் சொல்லி, அவனை அழைத்துப் போன மரகதம் - தனியறைக்குச் சென்று அவனிடம் எரிந்து விழுகிறாள்.

''கல்யாணமான மறுநாளே தண்ணி போடப் போகணுமா... உன்கூட எனக்குப் பெரிய எழவாப் போச்சு.... அந்தப் பொண்ணு, பொறந்த வீட்டுக்குப் போறேன்னு கிளம்பிடுச்சு.... நான் பிடிச்சு உட்கார்த்தி வச்சிருக்கேன்... வந்ததும் வராததுமா - அவளை பயமுறுத்தணுமா... உங்க அப்பாவுக்கு விஷயம் தெரிஞ்சா, என்னைக் கிழிச்சு தோரணம் கட்டிடுவாரு...''

அவன், தலை குனிந்து உட்கார்ந்திருக்கிறான்.

''இப்ப என்ன செய்யணுங்கறீங்க?

''முதல்லே, அந்தப் பொண்ணு இந்த வீட்டை விட்டுக் கிளம்பாதபடி வளைச்சுப் போடு... உன் மேல பிரியம் விழுந்தாத்தான் - அவ, உன்னைவிட்டு நகராம இருப்பா...''

அவள், மகனுக்குப் போதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் -

நந்தினியின் தந்தை, அவளை 'மறு வீடு' அழைத்துச் செல்வதற்காக, பூ, பழம், வெற்றிலைப் பாக்குடன் கிளம்பிக் கொண்டிருக்கிறார்...

''நேத்துதான் கொண்டு விட்டோம். இன்னிக்குப் போய் அழைச்சுட்டு வரச் சொல்றியேடி... அந்த அம்மா ஏதாவது சொல்லப் போறா...''

''பொண்ணையும், மாப்பிள்ளையையும், மறுவீட்டுக்கு அழைக்கறது சம்பிரதாயம். அப்படி அழைக்கலையின்னாத்தான் சம்பந்தியம்மா கோவிச்சுப்பா...

அப்பாவி அப்பாக்காரர், புன்னகையுடன் மகளின் நினைவையும் மனதில் சுமந்தபடி கிளம்புகிறார்...

நந்தினி, மூலைச்சுவரோடு முடங்கிக் கிடக்க - குமார், தலையைக் குனிந்தவாறு, தன் போதையுக்குள் நுழைகிறான்.

# 4

“நீ இன்னும் சாப்பிடலையா..?”

குமார், எதுவுமே நடவாதது போல, நந்தினியைப் பார்த்துக் கேட்கிறான்.

அவளுக்கு, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே பிடிக்கவில்லை...

கல்யாணக் கனவுகள் எல்லாம் கலைந்து போய், கால தடுக்கி, சாக்கடையில விழுந்தாறபோல் இருக்கிறது.

குமார், அவளைப் பார்த்தபடியே - தனக்கும், அவளுக்குமாய் தட்டுகளைக் கழுவி வைக்கிறான்... சமைத்து வைத்திருந்த சாப்பாட்டை, தானே எடுத்துப் பரிமாறுகிறான்...

“சாப்பிட வா நந்தினி...”

“இல்லே, எனக்குப் பசிக்கலே...”

“உனக்கு, என் மேல கோபம் இருக்கிறது நியாயம்தான் நந்தினி... நானோ, என் வீட்டைச் சேர்ந்தவங்களோ இதைப் பத்தி உனக்குத் தெரிவிக்காதது தப்புதான்... நான இந்த நிலைமைக்கு ஆளானதே தனிக் கதை நந்தினி... என் அண்ணாக்களுக்கு எங்க அப்பா காமிச்ச சலுகைகளிலே, நூத்துலே ஒரு பங்கு கூட, என்கிட்ட காமிக்கலே... எனக்கு எல்லாமே எங்க சித்திதான். அண்ணாக்கள் என்மேல புகார் சொல்றப்ப எல்லாம், எங்க அப்பா, பாய்ஞ்சு, பாய்ஞ்சு என்னை அடிப்பார்... சித்தி என்ன தடுத்தாலும் கேட்கமாட்டார்... ஒரு நாள் - இவர் அடிச்சதுல உடம்பு முழுக்க வீங்கிப்போய் - வலியை மறக்க - கொஞ்சமா குடிச்சேன். நான், தள்ளாடிட்டு வீட்டுக்கு வாறதைப் பார்த்ததுமே - எங்க அப்பாவும் அண்ணாக்களும் முகம் வெளுத்துப் போயிட்டாங்க... குடிபோதையில நான் எதுவும் கலாட்டா பண்ணக்கூடாதுன்னு, எங்க அப்பா, நான் கேட்டதையெல்லாம் கொடுத்தார். அன்னிக்குப் பிடிச்சது இந்த சனியன்... இன்னிக்கு என்னை இதுலேயிருந்து மீட்கவே முடியல்லே...”

குமார், தொண்டை கரகரக்க, தான் கற்பனை செய்து வைத்திருந்த கதையை மிக அழகாகக் கூறுகிறான்.

ஆனால்-

அவள் முகத்தில் எவ்வித மாற்றமுமில்லை.



“எனக்காக அன்பு செலுத்த யாருமே இல்லை நந்தினி... இப்பதானே நீ வந்திருக்கே... இன்னும் கொஞ்ச நாள்லே நான் இந்தப் பழக்கத்தையெல்லாம் அடியோட விட...”

மேற்கொண்டு பேச்சைத் தொடர முடியாதபடி, வாசற்பக்க அழைப்பு மணி ஒலிக்க...

அவன் சற்று எரிச்சலுடன் எழுந்து போய்ப் பார்க்கிறான்...

நந்தினியின் தந்தை... பின்னாலேயே சற்று கலக்கம் மிகுந்த பார்வையுடன் மரகதம்...

“என்னடா முழிக்கறே... மாமனார் வந்திருக்காரு... வாங்கன்னு கூட கூப்பிடாம...”

மரகதம்தான் சூழ்நிலையைக் கலகலப்பாக்க முயல்கிறாள்.

“வாங்க...”

குமார் தடுமாற்றத்துடன் வரவேற்க, வந்தவரின் முகமெல்லாம் புன்னகை...

“பொண்ணையும், மாப்பிள்ளையையும் மறுவீடு அழைச்சுட்டுப் போக வந்திருக்கார். இன்னிக்கு நாள் நல்லாயிருக்குதாம். இதை விட்டா, இந்த மாசத்துல வேற நல்ல நாள் கிடையாதாம்...”

மரகதம் இதைச் சொல்லியபடியே, நந்தினியின் முகத்தைக் கூர்ந்து பார்க்க...

அவளது முகத்தில் சட்டென படிந்த நிம்மதி - தட்டுல இருந்த சோற்றை அப்படியே வைத்துவிட்டு எழுந்து வந்து தந்தையின் பக்கத்தில் நிற்கிறாள் அவள்...

குமார், அவளை ஓரக்கண்ணால் பார்த்தபடி தன் மாமனாரை உபசரிக்கிறான்.

“உட்காருங்க முதல்ல... காபி சாப்பிடறீங்களா... இல்லே, ‘ஜில்’லுனு சாப்த...”

“நான் கேட்காம இருப்பேனடா குமார்... இப்பத்தான் நம்ம வீட்டுல ஜூஸ் வாட்டர் குடிச்சார்...”

மரகதம் முந்திக்கொண்டு சொல்ல...

வந்த மனிதர், தன் மகளின் முகத்தையே விழுங்கி விடுவது போலப் பார்க்கிறார்.

ஆசையாய் வளர்த்த மகள்...

இரண்டு மகன்களுக்குப் பிறகு, ஒரு பெண் குழந்தை பிறக்காதா

ஊ எங்கி, தவமிருந்து பெற்ற மகள்...

இவளுக்கு அடுத்து இன்னொரு மகள் இருக்கிறாள் என்றாலும் - மூத்த மகளிடம் பெற்றோர் வைக்கும் பிரியமே அலாதிதான்...

இத்தனை நாளில - இவளது முகம் வாடி, அவர் பார்த்ததே இல்லை...

இன்றுதான் பார்க்கிறார்.

'இது என்ன இத்தனை சோகம்...? பெரிய கண்களில் நீரோட்டம்..?'

'ராத்திரி முழுக்க தூக்கம் இல்லையா...?'

'புதுமணத் தம்பதிகளிடையே தூக்கமின்மை சகஜம்தான் என்றாலும், அந்த கண் விழிப்பில், பெண் முகத்தில் மெல்லிய நாணம் கப்பியிருக்குமே...?'

வந்தவருக்கு 'துணுக'கென்றாகிறது. இதற்குள் குமார் மிக அவசரமாய் சொல்கிறான்:

''நேத்திக்குத்தான் வந்து இறங்கியிருக்கோம். அதுக்குள்ள எப்படி புறப்பட முடியும்... மேலும், சரியா கவனிச்சிட்டிருக்கறப்பவே பிஸினஸ்லே, ஒவ்வொருத்தனும் ஏய்ச்சுக் கட்டறாங்க... சொந்தத் தொழில்லே லீவு எடுக்க முடியாது... இப்ப என்ன, நானும் நந்தினியும் இன்னும் ஒரு மாசம் கழிச்சே கிளம்பி வர்றோமே... அவளுக்கும் இங்கே எடுத்து வைக்க வேண்டிய சாமானெல்லாம் ஏகப்பட்டது கிடக்கு...''

''ஆமா... நானே சொல்லணும்னு இருந்தேன். தம்பி சொல்லிட்டான். இப்பத்தானே வந்திருக்கா. இன்னும் எங்ககூட எல்லாம் ரெண்டு வார்த்தை பேசக்கூட நேரமில்லை... அதுக்குள்ளே என்ன அவசரம்? நீ என்ன சொல்றே நந்தினி...''

மரகதம், திடீரென நந்தினியைப் பார்த்துக் கேட்க - அவள் கல்லாய் நிற்கிறாள்.

''அத்தை கேட்கறாங்க இல்லே? பதில் சொல்லும்மா...''

அப்பா, செல்லமாய் மகளை அதட்ட - அவள் 'விருட்'டெனப் படுக்கையறைக்குள் போய் - தனது சூட்கேஸை எடுத்து, கல்யாணப் பட்டுப்புடவைகளையும், நகைகளையும் எடுத்து திணித்துக் கொண்டு வெளி வருகிறாள்.

''நான் உங்க கூட வரேன்பா... அவர் வரல்லையின்னா போகட்டும்!''



''என்னது?''

அதிர்ந்துபோய் தலையை நிமிர்த்திய நந்தினியின் தந்தை மருமகனைப் பார்க்க -

''அவளுக்கு இன்னும் இந்த இடம் பழகலை இல்லையா... அதான் இப்படி... நந்தினி, கொஞ்சம் உள்ளே வாயேன்...''

குமார் மாமனாருக்குப் பதிலளித்தபடியே மனைவியிடம் குழைகிறான். ஆனால், அவளோ... இதற்கெல்லாம் மசிபவளாக இல்லையே.

''எதுக்கு?''

அவள், நின்ற இடத்திலிருந்து இம்மியும் நகராமல் கேட்கிறாள்...

''புருஷன்காரன் கூப்பிட்டா, துள்ளிட்டு ஓடவேண்டாமோ? இப்படியா, 'ஏன், எதுக்கு'ன்னு கேட்டுட்டு இருப்பாங்க... போம்மா... போய் என்னன்னு கேளு போ...''

மரகதம், தன் மாமியார் ஸ்தானத்தை விட்டுக்கொடுக்காமல் அவளை விரட்டுகிறாள்...

நந்தினியின் தந்தைக்கு எல்லாமே குழப்பமாய்...

''பெரியவங்க சொல்றாங்க இல்லே... போய் கேளும்மா...''

அப்பாவின் கட்டளையை மீறமுடியாதவளாய், கணவனைப் பின்தொடர்ந்த நந்தினி - அறையில் நுழைந்தவுடன் எரிச்சல் மண்ட கேட்கிறாள்...

''எதுக்காக கூப்பிட்டீங்க..?''

''ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்பறேன் நந்தினி... உன்னால என் எதிர்காலம் நல்லவிதமா மாறும்னு நான் நினைச்சுட்டிருக்கேன்... கொஞ்சமாவது என்னைப் புரிஞ்சுக்க... எங்க அண்ணன்கள் மூணு பேரும், நான் இனிமே ஒழுங்கா, ஒரு பெண்டாட்டிய வச்சு, குடித்தனம் பண்ண லாயக்கில்லாதவன்னு சொன்னாங்க... அவங்க மூக்கை உடைக்கறாப்பல நல்லா வாழ்ந்து காட்டணும்னு ஆசைப்படறேன்... தயவு செஞ்சு என் எண்ணத்தைக் கெடுத்துடாதே...''

''..........''

''உங்க அப்பா கூட போறதானா தாராளமாப் போயிட்டுவா. ஆனா, சரியா ரெண்டு நாள்... புதன்கிழமை சாயந்திரம் நீ, நம்ம வீட்டுல விளக்கேத்த வந்துடணும்... வரல்லையின்னா...''

அவன் வார்த்தையை முடிக்காமல், மனைவியின் முகத்தை இரு கைகளிலும் ஏந்துகிறான்.

''வரல்லையின்னா... அன்னிக்கு ராத்திரி நான் தற்கொலை பண்ணிக்குவேன், நந்தினி... ஏதோ குடிகாரன் பேச்சுன்னு அலட்சியப்படுத்திடாதே... தற்கொலை கோழைங்களோட முடிவுன்னு சொல்லுவாங்க... ஆனா, நான் சொல்றேன்... தற்கொலை செஞ்சுக்கவும் ஓரளவுக்கு தைரியம் வேணும். அந்த தைரியம் எங்கிட்ட இருக்கு... போயிட்டுவா...''

அவள், சுவரில் சாய்ந்தபடி, அவனையே பார்த்துக் கொண்டு சில நிமிஷத் துளிகளுக்கு நிற்கிறாள்...

பிறகு, மௌனமாய் பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்புகிறாள்...

''வாங்கப்பா... போகலாம்...''

''மாப்பிள்ளே...''

''அவருக்கு இங்கே நிறைய வேலை இருக்கு... அப்புறமா வர்றேங்கறாரு இல்லே... வாங்க... நாம போகலாம்...''

''அப்ப மாப்பிள்ளை... நந்தினிய அழைச்சுட்டுப் போக வருவீங்களா...?''

அவர், தன் அருமையான மருமகனைப் பார்த்துக் கேட்க, அவன் சிரித்தபடி தலையாட்டுகிறான்...

''ரெண்டு நாள்லே அவ இங்கே வரல்லைன்னா - நான் கிளம்ப வேண்டியதுதான்...''

''என்னடா சொல்றே?''

மரகதம் பதைப்புடன் வினவ...

அவன் சமாளிக்கிறான்.

''ஆமாம்மா.. ரெண்டு நாள்லே அவ திரும்பி வரல்லையின்னா, நானும் மாமனார் வீட்டுக்கு கிளம்ப வேண்டியவன்தானே... எத்தனை நாளைக்கு புதுப் பெண்டாட்டியை விட்டுப் பிரிஞ்சிருக்க முடியும்...''

நந்தினியின் தந்தை - இந்த வார்த்தைகளிலேயே மனம் பூரித்துப் போனவராய் சிரிக்கிறார்...

ஆட்டோவில் வீடு வந்து சேரும் வரையில் - தந்தையுடன் பேசவே இல்லை நந்தினி.

'எத்தனை வெகுளித்தனமான மனிதர் இவர்...'

'மாம்பலத்தில் இருக்கிற மாப்பிள்ளையின் சொத்து சுக விவகாரங்களை ஆராய்ந்தவர், அவரது குடும்பத்தின்



நிலவரங்களைப் பற்றி ஆராய்ந்தவர், அந்த வீட்டில் பெண் கொடுத்த ஒவ்வொரு சம்பந்தியின் குடும்பத்தைப்பற்றியும் அலசியவர், அவர்கள் வீட்டில் தஞ்சாவூர் பாணி சமையலா... திருநெல்வேலி பக்கத்து சமையலா என்றெல்லாம் விசாரித்தவர், மாப்பிள்ளையின் ஜாதகத்தில் - செவ்வாய் தோஷம் இருக்கிறதா இல்லையா என்று ஒன்றுக்கு பத்தாய் ஜோஸியர்களைத் தேடித் தேடி ஓடியவர்...

கடைசியில் மாப்பிள்ளையின் குணாதிசயத்தை கவனிக்காமல் ஏமாந்து விட்டாரே...'

'எப்படி விட்டார்...'

'எப்படி ஏமாந்தார்...'

'எது இவரை, சமயத்தில் குருடாக்கியது... என்னுடைய விதியா... துரதிருஷ்டமா இல்லை... அந்த வீட்டின் அதிருஷ்டமா...?'

அவள் பேசாமலிருப்பதை, பெற்றவர் தவறாகப் புரிந்து கொள்கிறார்...

'மாப்பிள்ளையை விட்டுட்டு வர மனசு வரல்லே போல இருக்கு...'

'அப்ப இருந்துட்டு ஒரு மாசம் கழிச்சு, அவர் கூடவே, வரவேண்டியதுதானே... என்னத்துக்கு இப்பவே புறப்படணும்...'

அவரும் பேசவில்லை. இத்தனை நாளும், கலகலவென்று பேசிப் பழகிய மகள், திடீரென அந்நியமாகிவிட்டாற்போல ஒருவித உணர்வு...

5

மைலாப்பூரில்-

வீட்டு வாசலில், மகளையும் மருமகனையும் ஆரத்தி சுற்றி வரவேற்க - பெற்றவளும், தங்கையும், அண்ணியும் காத்திருக்கிறார்கள்...

''வந்தாச்சு.... வந்தாச்சு...''

குரல் கொடுத்தவள் நந்தினியின் தங்கை கௌரி...

ஆவலுடன் எட்டிப்பார்த்த தாய், தன் கணவனுடன் மகள் மட்டும் வந்திறங்குவதைப் பார்த்ததும் நெஞ்சில் கல்லைத் தூக்கி வைத்தாற்போல திகைத்துப் போகிறாள்...

''ஏண்டி... நீ மட்டும் வந்திருக்கே..?''

கௌரியின் குரல் - தெரு முழுக்க ஒலிக்கிறது.

எடுத்த எடுப்பில், மனசிலுள்ள துக்கத்தை, தாய் தந்தையிடம்

கொட்ட முடியவில்லை நந்தினியால்.

கௌரியைப் பற்றிக் கூட கவலையில்லை. அண்ணியின் எதிரில் பேசத்தான் சங்கடமாக இருக்கிறது அவளுக்கு...

இந்த கல்யாணத்தில், அண்ணிக்கு கொஞ்சம் வருத்தம்தான். நந்தினியை அவள், தனது தம்பிக்கு மணமுடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாள்.

நந்தினியின் தாய்க்குத்தான் இதில் சம்மதமில்லை.

''பெண் எடுத்த வீட்டில், பெண் கொடுக்கக் கூடாது'' என்று நிர்த்தாட்சண்யமாய் மறுத்து விட்டாள்.

இன்று, அந்த அண்ணியின் எதிரில், தனது நிலைமையைச் சொல்ல எப்படி மனசு வரும்?

''ஏன் மாப்பிள்ளை வரல்லே?''

அம்மாவும், அண்ணியும் மாற்றி, மாற்றி கேட்ட கேள்விக்கெல்லாம், அவள் ஒரே பதிலைத்தான் சொல்கிறாள்;

''அவராலே இப்ப எங்கேயும் கிளம்ப முடியாதாம்...''

இரவு வரையில் கௌரியுடன் பேசிக்கொண்டிருந்தவள், படுக்கும்போது, தாயின் பக்கத்தில் படுக்க... தாயின் இதமான கைகள், அவளது நெஞ்சில் அடைந்து கிடந்த துக்கத்தைக் கிளறி விடுவதாய்...

மெள்ள விசும்பத் தொடங்குகிறாள் அவள்...

''என்னடி...''

''என்னை இனிமே அங்கே அனுப்பாதேம்மா...''

அம்மா, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்காருகிறாள்.

''என்னடி... குண்டைத் தூக்கிப் போடறே?''

நந்தினி பெரிசாய் அழத் தொடங்குகிறாள்... அம்மாவுக்கு, அத்தனை பதட்டத்திலும் ஒரு கவலை....

''சத்தம் போடாதேடி. உங்க அண்ணி காதுல விழுந்து வைக்கப்போறது... மெதுவா சொல்லு... என்ன நடந்தது... மாப்பிள்ளை நல்லவர்தானே...''

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று புரியாமல் விழிக்கிறாள் நந்தினி...

'குடிப்பவர்கள் எல்லாரும் கெட்டவர்களா?'

'அவர் குடிகாரர்ங்கறதுதான் தெரியுமே தவிர குணத்தைப் பத்தி எதுவுமே தெரியாதே...'



அந்த நேரத்தில்தான், கிளம்புவதற்கு முன் குமார் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகிறது...

'இன்னியிலேயிருந்து ரெண்டாவது நாள் சாயந்திரம் நீ வரல்லையின்னா - நான் தற்கொலை பண்ணிக்குவேன் நந்தினி... இது என் பிரஸ்டீஜ் சம்பந்தப்பட்ட விஷயம்...'

அவளது அழுகை, பிரவாகமெடுக்கிறது...

தாயின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு 'ஹோ' வென அழுகிறாள் அவள்.

இதற்குள், கௌரி எழுந்து விளக்கு ஸ்விட்சைத் தட்டி விட... சுவரோரமாய கட்டிலில் படுத்திருந்த அப்பா, எப்பொழுதோ எழுந்து உட்கார்ந்திருக்க -

செய்வதறியாமல் திகைத்த அம்மாவின் மார்பில் தலையைத் தேய்த்தபடியே சொல்கிறாள் நந்தினி.

''அவர்... அவர் நிறைய குடிக்கிறார்ம்மா...''

''யாரு... மாப்பிள்ளையா...?''

அப்பா, துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு அவளருகில் வந்து உட்காருகிறார்....

''உம்... நேத்து ராத்திரி ஒம்பது மணிக்கு ஏதோ வேலை இருக்குன்னு கிளம்பிப் போனவர்தான்... ராத்திரி முழுக்க வீடு திரும்பவே இல்லே... ரெண்டு மணி சுமாருக்கு, யாரோ நாலு பேர் வீட்டுல கொண்டு வந்து போட்டாங்க... குடிகாரர்னு தெரிஞ்சிருந்தும், அந்த மனுஷனுக்கு என்னை ஏமாத்திக் கல்யாணம் பண்ணியிருக்காப்பா அந்த மரகதம்...

''ஐயய்யோ...''

பெற்றவள் வயிற்றில் அடித்துக் கொண்டு அழத்தொடங்க நந்தினி, மீதியையும் சொல்கிறாள்...

''நான் திரும்பி வரல்லையின்னா, அவர் தற்கொலை பண்ணிப்பாராம்....''

''இதைத்தான் அவன், உள்ளே அழைச்சட்டுப் போய் சொன்னானா...?''

நந்தினி தலையாட்ட, அப்பாவின் முகம் கோபத்தில் ஜிவுஜிவுக்கிறது.

''சாகட்டும், விடு... என் பொண்ணுக்கு கல்யாணமே ஆகல்லேன்னு நான் நினைச்சட்டுப் போறேன். இனிமே நீ அங்கே

போகவேண்டாம்...''

அவ்வளவுதான் -

பெற்றவள், ஏதோ கேட்கக்கூடாத வார்த்தையைக் கேட்டு விட்டாற்போலப் பதறிப் போகிறாள்.

''நல்லாயிருக்கு நீங்க சொல்றது. வாழவேண்டிய பொண்ணுக்கு ஒரு அப்பாக்காரர் சொல்ற புத்திமதி இதுதானோ? நந்தினி...''

''உம்?''

''அவருக்கென்ன, சுலபமா சொல்லிடுவார். பின்னாலே அவதிப்படப்போறதெல்லாம் நாமதான்... எத்தனையோ வரன்களை ஆயிரம் குத்தம் சொல்லி, தட்டிக் கழிச்சதோட பலன்... இன்னிக்கு இப்படியொரு சாக்கடையில் போய் காலை விட வேண்டியதாப் போச்சு... நீ நாளைக்கே புகுந்த வீட்டுக்குக் கிளம்பு. நானே, உன்னைக் கொண்டு போய் விடறேன்...''

''அம்மா...''

நந்தினி, நர்ஸரி வகுப்புக்குப் போக மறுக்கும் குழந்தையைப் போல, தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.

''எனக்குப் பிடிக்கல்லே - ராத்திரி நாலு பேரா கொண்டு வந்து போட்டப்ப, சட்டை முழுக்க புழுதியும் வாந்தியுமா... உவ்வே...''

சொல்லும்போதே வயிற்றைக் குமட்டுகிறது அவளுக்கு...

''இத்தனை வருஷமா, யார் சொல்லியும் திருந்தாதவர், நான் சொல்லித்தானா திருந்தப் போறார்... எனக்கு பயம்மா இருக்கு...''

கௌரி, விம்மியழும் அக்காவை அணைத்துக்கொள்கிறாள்.

''விடும்மா, குடிச்சவன் பைத்தியக்காரன் மாதிரி நடந்துப்பான். நம்மவீட்டு வேலைக்காரி, தினமும் புருஷன்கிட்ட உதை பட்டு, அழுதுட்டே வருவாளே... அது மாதிரி நந்தினி நிலையும் ஆகணும்கறியா...''

அம்மாக்காரி, கல்லாய் இறுகிப்போய் உட்கார்ந்திருக்கிறாள்.

''நந்தினி... அவர் உன்கிட்ட என்ன சொன்னார்... ரெண்டாவது நாள் சாயந்திரத்துக்குள்ள திரும்பி வரல்லையின்னா - தற்கொலை பண்ணிப்பேன்னுதானே சொன்னார்... நீ போகாம இருந்து, ரோஷம் தாளாம, அவர், ஏதாவது இசகுபிசகா பண்ணிகிட்டார்னா, அந்தப் பழி யாரைச் சேரும்? பழிய விடு... லட்சமா செலவு பண்ணி ஒரு மஞ்சக்



கயித்தை உன் கழுத்துல தொங்க விட்டிருக்கோமே... அது - அது... கல்யாணமான ஒரு வாரத்துலேயே பறிபோயிடுமே... அப்புறம், அம்மான்னா வருமா... அப்பான்னா வருமா...''

''அம்மா...''

''எது எப்படியிருந்தாலும் ஒரு பொண்ணுக்கு தாலி முக்கியம்டீ... புருஷன் சரியில்லையின்னா நாம அவனைத் திருத்தப் பார்க்கணும். நம்ம குலதெய்வத்துக்கு வேண்டிக்க... திருப்பதிக்கு வந்து, பெருமாளுக்கு கல்யாண உற்சவம் பண்ணி வைக்கறேன்னு வேண்டிக்க... ஒவ்வொரு திங்கக் கிழமையும் உப்பு சேராம, பட்டினி கிடந்து, ராத்திரி ஈஸ்வரனுக்கு அர்ச்சனை பண்ணிட்டு, ஒரு டம்ளர் பால் மாத்திரம் குடி... உன்னை இனிமே, அந்த தெய்வங்கள் தான் காப்பாத்தணுமே தவிர... மனுஷங்க கையில ஒண்ணுமே இல்லை...''

புதன்கிழமை காலையே - மகளை அழைத்துக்கொண்டு கிளம்பி விட்டாள் அவள்...

மாலையில் வீடு திரும்புவதற்குள், மாப்பிள்ளையைப் பார்த்து, இரண்டு வார்த்தை பேசவேண்டுமென்று நந்தினியின் தாயும், தந்தையும் காத்திருந்ததுதான் மிச்சம்.

அவன் காலையிலேயே கிளம்பிப் போனானாம்... இன்னும் வரவில்லை...

''நீ... என்கூட இருந்துட்டுப் போம்மா...''

நந்தினி அழ... அம்மா, தர்மசங்கடத்துடன் கணவனின் முகத்தைப் பார்க்க... அவரோ வெட்ட வெளியை வெறிக்க...

மரகதம், நந்தினியின் முன்நெற்றிக் கூந்தலை வருடியபடியே சொல்கிறாள்...

''ஏன் கண்ணு... அண்ணாவும் அண்ணியும் ஆபீசுக்குப் போறவங்க... வீட்டுல வயசுவந்த பொண்ணு - அதான், உன் தங்கை ஒண்டியா இருக்கா இல்லே... காலம் கெட்டிருக்கற நிலையில் - அது மாதிரியெல்லாம் தனியா விடக்கூடாதுடியம்மா... உனக்கென்ன, அம்மாவுக்கு அம்மாவா, நான்தான் இருக்கேனில்லே...''

''இப்ப இத்தனை பேசறவங்க, அப்பவே இதுபத்தி ஒரு வார்த்தை பேசியிருக்கலாம்...''

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த கோபத்தை - அப்பா,

அவள் முன் கொட்ட

'சட்'டெனக் கலங்கிப் போகிறாள் அவள்.

"இதப்பாருங்க... இதுல ஏமாத்தணும்கற எண்ணமெல்லாம் துளிகூட கிடையாது. அவன் குடிப்பான்... அதுவும் எப்பவாவது... மத்தபடி தங்கமான பையன்... எனக்குத் தெரிஞ்சு, எங்க மகன் எந்த தப்பு தண்டாவுக்கும் போகாதவன். நந்தினி வந்த வேளை - இந்தப்பழக்கம்கூட இல்லாம, அவன் எப்படி மாறிடப் போறான்னு பார்த்துட்டேயிருங்க..."

பெற்றோர் கிளம்புகையில் - வாசல் வரையில் கூடப் போகவில்லை நந்தினி. மரமாய் - ஜடமாய் அமர்ந்திருக்கிறாள்...

அன்றிரவு முழுவதும் அவன் வரவே இல்லை... நெஞ்சைக் கையால பிடித்துக்கொண்டு, பொது வீட்டு ஊஞ்சலிலேயே உட்கார்ந்திருக்கிறாள் அவள்...

சம்பந்தி மனிதர்களுடன் அத்தனை தித்திப்பாய் பேசிய மரகதம், அப்புறம் வெளியே வரவேயில்லை.

"இந்தா, போய் படு... வராம எங்கே போயிடப் போறான்... உன்கூட சேர்ந்து நானும் உட்கார்ந்திருந்தா - உங்க மாமனார் என்னைக் கொன்னு போட்டுடுவார்..."

மரகதம் தன் கூட்டுக்குள் புகுந்துகொண்டதும், எதிர் போர்ஷன் சீதா, ஒரேயொரு முறை வெளியே வந்து, இவளைப் பார்த்து 'என்ன சௌக்கியமா' - என்பது போலப் புன்னகைத்து விட்டுப் போகிறாள்...

இமைகளை மூட முடியவில்லை நந்தினியால். அப்படியே மூடினாலும் - குமாரை வெறும் சடலமாய் நாலுபேர் கொண்டு வந்து போடுவது போலவும், அம்மாவும் மற்றவர்களும் அவளைக் கட்டிக்கொண்டு அழுவது போலவும்...

'ஐயோ... இவர் யார், என்னன்னுகூட இத்தனை நாள் வரைக்கும் தெரியாதே... இன்னிக்கு இவரோட மரணம், என் வாழ்க்கையோட சம்பந்தப்பட்டுடுச்சே... நான் என்ன செய்வேன்...'

கூடத்து சோபாவில் முடங்கிக் கிடந்தவள் எப்பொழுது தூங்கினாளோ...

விடிகாலை ஐந்து மணி சுமாருக்கு, குமார் வந்துதான் இவளைத் தட்டி எழுப்புகிறான்...



"இந்தா... எழுந்திரு..."

"........"

"என்ன பாழ்கறே... நான்தான் குமார்... பசிக்குது... என்ன இழுக்கு..."

அவள் மிரண்டபடி எழுந்தபோது - மாடிப் போர்ஷனிலிருந்து அபிராமி கையசைக்கிறாள்...

'நான் அப்புறமா வாரேன்...' - என்பது போல.

விடிகாலைப் பொழுதில், தட்டு நிறைய கல்யாண பட்சணங்களை வைத்துக்கொண்டு ஒருகை பார்த்துவிட்டு, கையையும் காலையும் பரப்பிப் போட்டுக்கொண்டு படுத்துத் தூங்குகிறான்.

'இவனைத் திருத்த முடியாது...'

உள்ளுக்குள் ஒரு குரல்....

அன்று நடுப்பகல் - ஒரு கிண்ணத்தில் ஏதோ பலகாரத்தை எடுத்து வந்து கொடுக்கும் சாக்கில் அபிராமி வந்து போகிறாள்.

பலகாரத்தை ஓரகத்திக்கு கொடுக்க வேண்டும் என்பதை விடவும், அந்த போர்ஷனுக்குள், இப்படியொரு புருஷனுடன் அவள் எப்படி குடித்தனம் நடத்துகிறாள் என்பதைப் பார்ப்பது தான் முக்கியமாக இருந்தது.

"எங்க வாயெல்லாத்தையும் கட்டிப் போட்டுட்டா இளையராணி.... இளையராணின்னா யார் தெரியுமோ இல்லையோ... அவதான் நம்ம மாமியார்... ஒருவிதத்துல பாக்கப்போனா குமாருக்கு கொடுத்த செல்லத்தை, எங்க வீட்டுக்காரருக்கும், மத்தவங்களுக்கும் கொடுக்காததே நல்லதாப் போச்சு... நீ இப்படி வாயில்லாப் பூச்சியா இருந்தா ஒண்ணும் நடக்காது. நாளைக்கே, உன்னோட நகை, வெள்ளிப்பாத்திரம் எல்லாம் ஒவ்வொண்ணா திருட்டுப்போக ஆரம்பிச்சிடும்... மாசா மாசம் பிஸினஸ்லே வர்ற பத்தாயிரம் ரூபா போறலை மச்சினருக்கு... தினமும் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இதுபத்தின சண்டைதான். நீ, இங்கே இருக்கறதுக்கு, பேசாம உன் பிறந்த வீட்டுக்குப் போயிடறதுதான் நல்லது. நீ டிகிரி வாங்கியிருக்கே இல்லே... ஏதாவது வேலைக்குப்போ..."

"ஆமா... பார்த்தா ரொம்ப பாவமாயிருக்கு..."

இது, அவள் முதுகோடு ஒட்டிக்கொண்டு வந்த இரண்டாவது மருமகள்.

அன்று மாலையில்-

குமார் வீட்டை விட்டு வெளியே போகவில்லை. இவளையே சுற்றிச்சுற்றி வருகிறான்.

முதல் நாள் மாலையில் அவள் வீடு திரும்பமாட்டாள் என்கிற அவநம்பிக்கையுடன்தான் குடிக்கப் போனதாகச் சொல்கிறான். வாழ்க்கையில் தனக்கு எதுவுமே இல்லை என்கிற வெறுப்பு ஏற்படும்பொழுதுதான் மதுவின் நினைப்பு வருவதாகச் சொல்கிறான். இனிமேல அப்படி நடக்கவே நடக்காது என்று சத்தியம் செய்கிறான்.

அன்றிரவு - எதிர்காலத்தைப் பற்றி, தான் வகுத்துள்ள திட்டங்களைப் பற்றி விவரித்தபடியே, முதலிரவைக் கொண்டாடுகிறான்....

''இவங்க யாருக்குமே என்மேல நம்பிக்கையில்லே நந்தினி... ஒரு தடவை, எங்க அண்ணாவோட காரை நான் உடைச்சுட்டேன்... அதுக்காக, லட்ச ரூபாய் கேட்கறா அவன் பெண்டாட்டி... கொடுத்து தலை முழுகிட்டேன்னா நிம்மதியாப் போயிடும்... இப்ப, உங்க வீட்டுல வரதட்சணையா கொடுத்த அம்பதாயிரத்தையும் அவன்கிட்ட கொடுத்திட்டேன். மீதிப்பணத்துக்கு வழி தெரியல்லே... அதனாலத்தான் என்னைப்பத்தி மட்டமாய் பேசிட்டு திரியறா அண்ணி.''

நந்தினி, மௌனமாக இருக்கிறாள். அவனருகில் படுக்கவோ, பேசவோ ஒரு மனதுக்குப் பிடிக்கவில்லை. இன்னொரு மனதோ - அவனது அம்மாவின் கட்சி பேசுகிறது...

'அன்பாலே இவரை திருத்தமுடியுமான்னா திருத்திப்பாரேன்...'

அவன் திருந்துகிறானோ இல்லையோ - தான் ஏமாந்தது அப்பொழுது புரியவில்லை அவளுக்கு...

''அண்ணாவுக்குக் கொடுக்கவேண்டிய அம்பதாயிரத்தைக் கொடுத்துட்டேன்னா கொஞ்சம் நிம்மதியா இருக்கும். அதுக்கு ஒரேயொரு வழிதான் இருக்கு. சொன்னா நீ கோவிச்சுக்க மாட்டியே..?''

''.........''

''உன் ஜுவல்ஸைக் கொடுத்தா, 'பாங்க்'லே வச்சு, கடனா அம்பதாயிரம் வாங்கிக் கொடுத்திடுவேன்... அப்புறம், எனக்கு மாசா



மாசம் வர்ற ஷேர் பணத்துலேயே அடைச்சிடலாம். உன்னை நான் வற்புறுத்தலை... இஷ்டமிருந்தா கொடு. இல்லாட்டி நான் பார்த்துக்கறேன்...''

மறுநாள்-

இதுபற்றி, மரகதம் சொல்கிறாள்.

''புருஷனுக்கு உதவாத நகையும் நட்டும் இருந்துதான் என்ன பிரயோசனம்? அந்தக் காலத்துல நான் - எங்க வீட்டுக்காரருக்கு வியாபாரத்துல நஷ்டம் வந்தப்ப - எங்க அம்மா வீட்டு சீதனமா கொண்டு வந்த நூறு பவுன் நகையையும் கொடுத்தேன்... அப்புறம், அவரே அத்தனையையும் வாங்கிப் போட்டார். அது மாதிரி... கணவனுக்கு சமயத்துல உதவறதுதான பெண்டாட்டியோட கடமை...''

அன்று - யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் தனது போர்ஷன் கதவை இழுத்துப் பூட்டிக்கொண்டு, பிறந்த வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்.

உச்சி வெய்யிலில், வியர்க்க விறுவிறுக்க வந்து நின்ற மகளைக் கண்டதும் பிரமித்து நிற்கிறாள் அம்மா.

உள்ளே நுழையும்போதே நந்தினி கேட்ட முதல் கேள்வி இதுதான்.

''அண்ணி எங்கேம்மா?''

''ஆபீசுக்குப் போயிட்டா...''

''இல்லே... சனிக்கிழமையாச்சேன்னு கேட்டேன்...''

''என்னமோ ஓவர் டைம்மாம்... நீ சொல்லு... மாப்பிள்ளை எப்படி நடந்துக்கறார் உன்கிட்ட? இப்பவும் குடிக்கறாரா..?''

''ரெண்டு நாளா - எனக்குத் தெரிஞ்சு இல்லே...''

''ஐயோ... தெய்வம் கண் திறந்து பார்த்துடுத்துடி...''

''ரொம்ப சந்தோஷப்பட்டுக்காதே...''

நந்தினி, நடந்தவற்றைச் சொல்ல, அசையாமல் உட்கார்ந்து விட்ட அம்மா கடைசியில் பதில் சொல்கிறாள்.

''உங்க மாமியார் சொன்ன அதே வார்த்தையைத்தான் நானும் சொல்லுவேன். இப்ப, உங்க அப்பாவுக்கு பணமுடையின்னா நான், என் நகைங்களைக் கொடுக்கறதில்லையா... உன் கல்யாணச்

செலவுக்கே, அப்படித்தானே பணம் புரட்டினார் உங்க அப்பா...''

''அப்பாவுக்கு நீ கொடுக்கறது வேற... இவருக்காக நான் கொடுக்கறது வேற... அது என்னமோ, இவர் ஆயிரம்தான் சமாதானம் சொன்னாலும் - எனக்கு நம்பிக்கையில்லே... அத்தனை நகையையும் தூக்கிக் கொடுத்துட்டு, அப்புறம் திரும்பியே வரல்லைன்னா நான் என்ன செய்யறது...''

''கழுத்துல போட்டுக்கற நகை ஒசத்தியா... தாலி கட்டின புருஷன ஒசத்தியா...? இதுலேயெல்லாம் இத்தனைப் பற்று வைக்கவே கூடாது நந்தினி. எப்ப, நீயே அவருக்கு சொந்தமாயிட்டியோ... அப்புறம் இதெல்லாமும் அவருக்குத்தானே சொந்தம்...?'

அம்மா, புராணகாலத்தில் ரிஷி பத்தினியாக இருக்க வேண்டியவள்... இந்தக் காலத்துக்கு ஒத்துவராத தத்துவத்தைச் சொல்கிறாள்... அது மட்டுமில்லை..., மகளை அதிக நேரம், தன் வீட்டில் தங்க வைக்கக்கூட அவள் விரும்பவில்லை...

மகளுடன் பஸ் ஸ்டாண்ட் வரையில் வந்து, மடி நிறைய அறிவுரைகளைக் கட்டி, அனுப்பி வைக்கிறாள்...

மரகதத்தின் எதிரில்தான் குமாரிடம் அவள் நகைகளைக் கொடுக்கிறாள்...

''இங்கே பாரும்மா... புருஷன் பெண்டாட்டிக்குள்ளே ஆயிரம் கொடுக்கல் வாங்கல் இருக்கும். அதையெல்லாம் வெளியில சொல்லிட்டுத் திரியக் கூடாது. உன் புருஷன் - கடனில்லாம நிம்மதியா இருந்தா - உனக்குத்தானே சந்தோஷம்...''

மரகதம் பெரிய தத்துவத்தை சொன்னாளே தவிர - அதற்குப் பிறகு இந்த விஷயத்தைக் கண்டுகொள்ளவே இல்லை...

கிட்டத்தட்ட நாலு மாதங்கள்....

அந்த நகைகளைப் பற்றிப் பேச்சு மூச்சில்லை...

ஒவ்வொரு நாளும் 'வட்டி கட்டறீங்களா?' - இப்படி அவள் கேட்கும்பொழுதெல்லாம், 'உம்...உம்...' என்கிற பதில்தான்...

பாதி நாட்கள் இரவு வீட்டுக்கு வர ஒரு மணிக்கு மேலாகி விடும்.

கேட்டால பிஸினஸ் என்பான்; வெளியே கான்ஃபரன்ஸ் என்பான். சினேகிதனின் கல்யாண ரிசப்ஷன் என்பான்; இல்லாவிட்டால், 'அப்பாவுடனும் சித்தியுடனும் பேசிக்கொண்டிருந்தேன்' என்பான்...

ஒரு முறை... இந்த நகைகளைப் பற்றிய பேச்சு வந்தபோது - சாப்பிடும் தட்டைத் தூக்கி, அவள் முகத்தில் அடிக்கிறான்.

''உன் நகை எங்கேயும் போயிடல்லே... பத்திரமா திரும்பி வரும். போட்டுட்டு அழகு பாரு... நான் இருந்தாத்தானேடி, நீ நகையைப் போட்டுட்டு மினுக்க முடியும்? நானே போயிட்டா அப்புறம் என்ன பண்ணுவே? அதையும்தான் பார்த்துடறேன்...''

அவன், சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துக் காண்பிக்கிறான்.

''இது என்ன தெரியுமா... ஸ்லீப்பிங் பில்ஸ்... எப்ப வேணா எடுத்துப் போட்டுக்கத் தயாரா வச்சிருக்கேன்... வர வர உன் தொந்தரவு தாங்கவே முடியல்லே... பத்து மாத்திரையை சேர்த்துப் போட்டுகிட்டா அவ்வளவுதான்... ஆளே குளோஸ்... ஒரு லெட்டர் எழுதி வச்சிட்டுப் போயிடப்போறேன்... உன் வயித்துல வளர்ற பிள்ளை, பிறக்கறப்பவே அப்பா இல்லாத பிள்ளையாத்தான் பிறக்கும்...''

நந்தினி, இரு காதுகளையும் பொத்திக் கொள்கிறாள்.

அதற்குப்பின் நகைகளைப் பற்றி அவள் கேட்கவில்லை. என்றாலும் - அபிராமி, ஒரு நாள் இவளை, நடுக்கூடத்தில் நின்றபடி அழைக்கிறாள்...

''நந்தினி, உங்க வீட்டுக்காரர், எங்க காரை உடைச்சு வித்துட்டாரு... லட்ச ரூபா பணம் தரணும்... எப்ப தரப் போறாருன்னு கேளு...''

''பணம்... பணமா... உங்களுக்குத்தான் கொடுத்தாச்சே!''

''கொடுத்தாச்சா? யாருடி கொடுத்தது..?''

நந்தினி மரகதத்தை அழைத்துவர ஓடுகிறாள்; அவளோ, நிர்த்தாட்சண்யமாய் வர மறுக்கிறாள்....

''இங்கே பாரு... அண்ணாவுக்குக் கொடுக்கணும்னு வரதட்சணை பணத்தையும், உன் நகைகளையும் வாங்கிட்டதுதான் எனக்குத் தெரியுமே தவிர - அதை, அண்ணாவுக்குத்தான் கொடுத்தானா, தாரைவார்த்துட்டானா, எதுவும் எனக்குத் தெரியாது. சும்மா என்னைத் தொந்தரவு பண்ணாதே... ஆளை விடு...''

அவள் எழுந்து வரவேயில்லை...

நந்தினி, கணவனைத் தேடி ஓடிவந்தபோது - அவன், நிம்மதியாய் தலையணையைக் கட்டிக்கொண்டு தூங்கிக் கொண்டிருக்கிறான்...

"என்னங்க... என்னங்க... எழுந்திருங்களேன்..."

"என்ன..?"

"அண்ணாவுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை இன்னும் நீங்க கொடுக்கலையா?"

"அதைக் கேட்க இப்பத்தான் நேரம் பார்த்தியா...?"

"வெளியில அண்ணி நின்னுட்டு கூச்சல் போடறாங்க... பணத்தையும், நகைகளையும் வாங்கி என்ன செஞ்சீங்க..?"

"ச்சீ... அழாதே... பார்க்க சகிக்கலே... இரு... நான் அந்த... ச் சிறுக்கி கிட்டப் பேசிட்டு வந்துடறேன்..."

அவன் விடுவிடுவென எழுந்து வாசல் பக்கம் போகிறான் - அடுத்த நிமிஷம் வெளியே பூகம்பமே நடக்கிறது...

கொஞ்சம்கூட நாகரீகமில்லாமல், நாக் கூசும் வார்த்தைகளை, கூடமெங்கும் வாரியிறைக்கிறான் அவன்...

ஒரு வார்த்தைகூட, படித்த, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உபயோகிக்கும் வார்த்தை இல்லை...

இதற்குள், அண்ணன்காரன், மாடியிலிருந்து இறங்கி வந்து நேரே களத்தில் குதிக்கிறான்... அவனுக்குத் துணையாய் மற்ற இரு சகோதரர்களும்...

'நச் நச்'சென்ற அடியும், 'ஐய்யயோ' என்கிற ஓலமும்... நந்தினி, அறையை விட்டு வெளியே வரவே இல்லை...

சரியாய் ஒருமணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு, சட்டை நார் நாராய் கிழிந்து தொங்க, உதடு பிளந்து ரத்தம் கசிய, வீட்டுக்குள் வருகிறான் குமார்...

படுக்கையில் வந்து விழுந்தவன், வாயில் வந்தபடி அந்த வீட்டிலுள்ளவர்கள் அத்தனை பேரையும் திட்டித் தீர்க்கிறான்...

நந்தினி, அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்...

'இவனை நம்பி என்னைக் கொடுத்தது எவ்வளவு மடத்தனம்..! அது மட்டுமில்லையே...! இவனது பிள்ளையை வேறு வயிற்றில் சுமக்கிறேனே... இது எத்தனை அவமானம்..!'

இப்பொழுதெல்லாம் நினைத்தால் பிறந்து வீட்டுக்கு கிளம்பிப் போய் விடுகிறாள் அவள்...

அண்ணிக்கும் மற்றவர்களுக்கும் தெரியக் கூடாதென்று மூடி மூடி



வைத்த அந்தரங்கங்கள் எல்லாம் அம்பலத்துக்கு வந்தாயிற்று...

இந்த முறை பிடிவாதமாய், பிறந்த வீட்டை விட்டு நகர மறுக்கிறாள் அவள்.

"நீங்க எனக்காக ஒண்ணும் செய்ய வேண்டாம். டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போய், வயித்துல இருக்கற ரெண்டுமாசக் கருவைக் கலைச்சிடுங்க.... அது போதும். நான் மறுபடியும் அங்கே போய், செத்து மடியறேன்... இவரோட பிள்ளைய சுமக்கவே எனக்கு அவமானமா இருக்கு...."

அம்மா மகளின் வயிற்றில் கை வைத்தபடியே தழுதழுக்கிறாள்...

"பிள்ளையாலே குடும்பம் விளங்காதா... பொண்ணால தரித்திரம் விடியாதான்னு சொல்லுவாங்க. ஒரு குழந்தை பிறக்கிற நேரம் - உன்னோட கஷ்டமெல்லாம் விடியலாம் இல்லையா... குழந்தை இல்லை இல்லையின்னு உங்க அண்ணனும், அண்ணியும் தபஸ் கிடக்காங்க... வேண்டாம்னு சொல்லாதேடி..."

"அப்ப, குழந்தை பிறக்கட்டும். ஆனா, நான் குழந்தையோட மறுபடியும் அங்கே போக மாட்டேன். இங்கேதான் இருப்பேன்..."

"ஒரு விஷயத்தை நீ யோசிக்க மாட்டேங்கறே நந்து... நீ புருஷனோட வாழாம, இங்கே வந்திருந்தா - கௌரிக்கு எப்படி கல்யாணம் நடக்கும்? அக்காக்காரி, வாழா வெட்டியா வீட்டோட இருந்தா - தங்கைக்காரிக்கு தாலி எப்படி கழுத்துலே ஏறும்..."

"எனக்காக ஒண்ணும் அக்கா, அந்த வீட்டுல கஷ்டப்பட வேண்டியதில்லே..."

கௌரி, ரோஷம் பொங்கக் கூறுகிறாள்.

"இப்ப நீ சொல்லுவே... வருஷக்கணக்கா, கல்யாணம் ஆகாம உட்கார்ந்திருந்தா அப்பத் தெரியும்..."

நந்தினி இறுகிப் போய் உட்கார்ந்திருக்கிறாள்...

"இருட்டறதுக்குள்ளே கிளம்பு நந்தினி..."

'ச்சே... என்ன மனசு இந்த அம்மாவுக்கு... ஒத்து வராத புருஷனுடன், தாலி கட்டிக்கொண்ட ஒரே பாவத்துக்காக எத்தனை காலம் வாழ்வது...'

விவாகரத்து என்கிற சுலபமான வழியிருந்தும் அதை நிறைவேற்ற முடியாத அவதி...

விவாகரத்துக்குப்பிறகு, அவள் எங்கே போவாள்... மறுபடியும்

பிறந்த வீட்டைத்தானே நம்பி வரவேண்டும். இவளது விவாகரத்து - அடுத்தவளின் விவாகத்துக்கே தடையாக இருக்குமெனத் தாய் பயமுறுத்துகிறாளே...

அன்றுதான்...

தனது போர்ஷனில் முதல் முறையாக - கடவுள் படங்களின் முன் விளக்கேற்றி வைத்துவிட்டு, மானசீகமாய் பிரார்த்திக்கிறாள் அவள்...

'தெய்வமே... எத்தனையோ தடவை அந்த மனுஷன் குடிச்சுட்டு தெருவுல விழுந்து கிடக்காரே... ஒரு தடவையாவது அவர் மேல லாரி, பஸ் ஏதாவது ஏறாதா...'

'ஐயோ! ஒரு இந்தியப்பெண், இப்படி நினைக்கலாமோ..? நான் எத்தனை மட்டமானவளாயிட்டேன்..!'

ஒரு கணம் நெஞ்சு அதிர்ந்தாலும், பாழாய்ப் போன மனசு, மறுபடி மறுபடி இதையே நினைக்கத் தொடங்குகிறது.

வலியெடுத்து ஆஸ்பத்திரிக்கு போகும்போதுகூட அவள் சிந்தை முழுக்க இதுதான்.

'பிறக்கற குழந்தை ராசியாவது - இந்த ராட்சஸனைக் கொண்டு போனா சரிதான்.'

## 6

இப்பொழுதெல்லாம் நந்தினி, குமாருக்கு சரியாய் கத்தத் தொடங்கிவிட்டாள். அவன் கொடுக்கும் அடிகளை சுமக்கப் பழகி விட்டாள்.

இரவு, அவன் வீடு திரும்பாவிட்டால் கவலைப்படுவதே இல்லை. திரும்பி வந்தால்தான் வருத்தப்படுவாள். நடுவில் ஒருமுறை சண்டை வலுத்தபோது - அவன், தனது பழைய பயமுறுத்தலைத் தொடர...

''ஸ்லீப்பிங் பில்ஸ் வச்சிருக்கேன்டி.''

''அதை ஏன் சும்மா சொல்லிட்டேயிருக்கீங்க... தைரியமிருந்தா முழுங்குங்க...''

''என்னது?''

''முழுங்குங்கன்னு சொன்னேன். இதனால ஒண்ணும் இப்ப மோசமாயிடப் போறதில்லை... நானும் என் பொண்ணும் நிம்மதியா இருப்போம்...''



''என்னடி சொன்னே... என்னடீ சொன்னே...''

அவன் பாய்ந்து பாய்ந்து உதைக்கிறான்... சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த மரகதத்திடமும் சொல்கிறான்...

''இவ திமிரைப் பார்த்தீங்களா சித்தி... என்னை செத்துப் போகச் சொல்றா...''

அவள், படபடவென வாயில் அடித்துக் கொள்கிறாள்.

''ஆனாலும் ஒரு பொண்ணுக்கு இத்தனை திமிர் ஆகாதுடியம்மா... அகமுடையானை சாகச் சொல்றாளே... அவன் போனதுக்கு அப்புறம் உனக்கு, இந்த பூலோகத்துல என்னடீ இருக்கு...''

''இப்ப மாத்திரம் என்ன இருக்காம்..?''

நந்தினி, தன் மகளைத் தூக்கி 'லபக்'கென இடுப்பில் வைத்துக் கொண்டு நகருகிறாள்...

இவர்கள், இவளை எந்த வழிக்கும் போக விடவில்லை.

ஒருமுறை தனது சான்றிதழ்களை எடுத்துக்கொண்டு, அருகிலிருந்த பள்ளிக்கூடத்திற்கு, ஆசிரியை வேலைக்கு நேர்முகத் தேர்விற்கு சென்றிருந்தாள்.

பள்ளித் தலைமையாசிரியர் - இவள் ராஜரத்னத்தின் மருமகள் என்பதைத் தெரிந்து கொண்டதும் - நேரே தகவல் தெரிவித்து விட்டார்.

அன்றே, முத்தப்பா இவளை எஜமான் கூப்பிடுவதாகச் சொல்லி அழைத்துப் போனான்.

ராஜரத்னம், அதிகமாக நடமாட்டமில்லாமல், படுக்கையில கிடப்பதால், அவரை சந்திக்க வேண்டுமென்றால் பிள்ளைகளும், மருமகள்களும் அவரது இருப்பிடம் தேடித்தான் போக வேண்டும்.

நந்தினி இரண்டு மூன்று தரம், அவரைப் போய்ப் பார்த்திருக்கிறாள்...

வளைகாப்பு ஆனதும் பெரியவரைப் பார்த்து வணங்கப் போனாள்... அடுத்து, மகள் கிருபா பிறந்ததும் மூன்று மாதக் குழந்தையை எடுத்துக் கொண்டு பிறந்த வீட்டிலிருந்து, புகுந்த வீட்டுக்கு வந்ததும் போயிருக்கிறாள்... மூன்றாவது தரம் - ராஜரத்னத்துக்கு உடல் நிலை மோசமானபோது, எல்லா மருமகள்களோடும் கும்பலோடு கும்பலாய் நின்று பார்த்துவிட்டு வந்தாள். ஒரு முறை கூட நேரிடப்

பேசினதில்லை.

இன்றுதான் பேசினார்.

''வாம்மா...''

''......''

''பக்கத்து பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் போன் பண்ணினார்... நீ வேலை கேட்டு அவர்கிட்டப் போயிருந்தியாம்...''

''ஆமா... எத்தனை நாள்தான் கைக்கும் வாய்க்கும் போறாம கஷ்டப்பட முடியும்.... எத்தனை நாள்தான் அரிசியும், பருப்பும் பிறந்த வீட்டுலேயிருந்து எடுத்துட்டு வரமுடியும்... எத்தனை நாள்தான் இவர்கிட்ட அடி தின்னுட்டு இவர் சொல்ற ஜகதலப்பிரதாபக் கதைங்களை எல்லாம் கேட்டுட்டிருக்க முடியும்...''

ராஜாத்னம் மௌனமாய் தலைகுனிந்தார்.

''நான் அப்பவே சொன்னேன்... அந்த கடன்காரனுக்கு கல்யாணம் வேண்டாம்னு... இவதான் கேட்கலை... அதுக்காக நீ வெளியில் வேலை தேடிப் போகாதேம்மா... எனக்குத்தான் அது கௌரவக் குறைச்சல்... உனக்குப் பணம் வேணும்னா என்னைக் கேளு... தரேன்...''

''பணம் ஒண்ணு மட்டும் - நான் வேலைக்குப் போகக் காரணமில்லே... எத்தனை நாள்தான், இந்தக் கூட்டுக்குள்ளே சிறைப் பட்டுக் கிடக்கமுடியும்.... ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்குகூட, அப்பப்போ தோட்ட வேலை, அது இதுன்னு காத்தாட வெளியில வர முடியும்...''

''அதுக்காக என்ன பண்றதும்மா... இங்கே பாரு... என்னோட நாலாவது பங்கு சொத்தை, உன் குழந்தைக்குத்தான் எழுதி வைக்கப்போறேன்... உனக்கும் எவ்வளவு வேணுமோ, அவ்வளவு தொகை தரேன்... வேலை தேடி, என் மானத்தை வாங்காதே...''

நந்தினி, அவரை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''என் குழந்தைக்கோ, எனக்கோ உங்க பணம் வேண்டாம்... விடுதலை கிடைச்சா சரி...''

அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே - வெளியேறி விட்டாள் அவள்.

அன்றிரவு - இதே விஷயத்துக்காக குமார், குதிகுதியென்று



குதிக்கிறான்...

''யாரைக் கேட்டுட்டு நீ வேலை தேடிப் போனே..?''

''இதுக்கு யாரையும் கேட்கணும்னு அவசியமில்லே..!''

''பல்லை உடைப்பேன்... போடற சோத்தைத் தின்னுட்டு வீட்டுக்குள்ளேயே விழுந்துகிட....''

''சரிதான் போடா!''

அவள் ஆவேசமாய் இரைய... அவன், அவளது தலை முடியைப் பிடித்து உலுக்கிவிட்டுப் போகிறான்.

இந்த முறை அவள், குழந்தையுடன் கண்ணீரும் கம்பலையுமாய் பிறந்த வீட்டுக்குப் போனபோது - அப்பாவே தயங்கித் தயங்கிச் சொல்கிறார்.

''கௌரி கல்யாணத்தை விட்டுத் தள்ளு நந்தினி. இதோ நீ பெத்து வச்சிட்டிருக்கியே ஒரு பொண் குழந்தை.. நாளைக்கு இவளுக்குக் கல்யாணம்னு வர்றச்சே - அப்பாக்காரர் எங்கேன்னு கேட்பாங்களே... குடிகாரன்னு நீ. விலகி வந்துட்டதா சொன்னா நம்ப மாட்டாங்க... நீதான் ஏதோ ஒத்துவராம முறைச்சுட்டு வந்துட்டதா பேசுவாங்க... அப்படியே அவன் குடிகாரனாயிருந்தாலும், அக்கறை உள்ளவ, அவனைத் திருத்த முயற்சிக்கணும்னு சொல்லுவாங்க... பேசறவங்க என்னம்மா... வாய் புளிச்சதோ, மாங்காய் புளிச்சதோன்னு நல்லாத்தான் பேசுவாங்க...''

''வெறும் குடிகாரரா மட்டும் இருந்தாப் பரவாயில்லே... உலகத்துல இருக்கற எல்லாக் கெட்ட குணங்களும் இருக்கு... இவரோட குடித்தனம் பண்ண ஆரம்பிச்ச இத்தனை நாளுலே எனக்கு நல்ல விஷயங்களே மறந்து போச்சு...''

''நளாயினியோட புருஷனைவிட மோசமானவர் கிடையாது. அவரைக் கூடையில வச்சு தூக்கிட்டு வேசி வீட்டுக்குப் போனா அவ... அவளும் நம்ம நாட்டுப் பொண்ணுதான்...''

- இது அம்மா...

நந்தினி சீறுகிறாள்...

''பேசமாட்டியா பின்னே... உனக்கு ராமச்சந்திரமூர்த்தி மாதிரி புருஷன் கிடைச்சிருக்கார்... அதனால, மத்த பொண்ணுங்களோட கஷ்டம் உனக்குப் தெரிய நியாயமில்லே... என் நிலையில அஞ்சு நிமிஷம் வாழ்ந்து பாரு... அப்ப புரியும்...''

அம்மா, பிழியப் பிழிய அழுகிறாள்.

"எனக்கு உன் சிரமம் புரியறதுடி கண்ணே... நான் மாத்திரம் மனசு சந்தோஷத்தோடயா இதைச் சொல்றேன்..."

அன்று அவள் வீடு திரும்பியபோது - அப்பா கெஞ்சும் குரலில கேட்கிறார்.

"குழந்தைய வேணுமானா இங்கே விட்டுட்டுப் போறியாம்மா..?"

"எனக்கு இடமில்லாத வீட்டுல, என் பொண்ணுக்கு மாத்திரம் என்ன வேலை? ஒண்ணு மட்டும் நிச்சயம். இனிமே இங்கே வரப் போறதில்லே. அப்படியே வர்றதாயிருந்தா - மறுபடியும் திரும்பியே போகமாட்டேன்... என்னை, நீங்க, பிடிக்கறதோ... பிடிக்கலையோ - வீட்டோட வச்சுட்டுத்தான் ஆகணும்..."

அவள் கிளம்பி விட்டாள்...

அன்று முழுக்க குமார் வரவேயில்லை... அடுத்த நாளும் வராதபோது, மரகதம் கொஞ்சம் கவலைப்படுகிறாள்.

"என்னடி... அவனைக் காணோம்?"

"என்னைக் கேட்டா..? என்கிட்ட சொல்லிட்டாப் போனார்?"

நந்தினி, கிருபாவை மடியில் போட்டு - தட்டிக்கொண்டே சொல்கிறாள்...

மூன்றாவது நாள்... நாலாவது நாள்... வீடு எந்தவித அமர்க்களமுமில்லாமல் இருக்கிறது...

குழந்தைக்கும் தனக்குமாகச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, மாலைநேரங்களில் குழந்தையுடன் கோவிலுக்குப் போய், இரவு சீக்கிரம் சாப்பிட்டு, டிவியில் நாடகம் பார்த்துக் கொண்டே தூங்கி...

நடுவில், பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு துணுக்கைப் படித்துவிட்டு சிரித்ததாகக் கூட ஞாபகம்...

ஒருமுறை அபிராமி, இவளைத் தேடி வந்து விசாரிக்கிறாள்.

"எங்கே, மச்சினரை மூணு நாலு நாளாகக் காணோம்..?"

"தெரியல்லே... கிளம்பிப் போனவர்தான் - எங்கே போனாரோ..."

"ஐயய்யோ... எங்கேயாவது குடிச்சுட்டு விழுந்து, லாரி, பஸ்



மோதியிருக்கப் போறதுடி..."

நந்தினி, விழிகள் பிரகாசிக்க அவளை ஒருமுறை பார்த்து விட்டுத் தலை குனிகிறாள்...

"அதெல்லாம் ஒண்ணும் நேராது. கையில இருக்கற காசு கரைஞ்சதும், எங்கே சோறு கிடைக்கும்? இங்கேதான் வருவார்..."

அபிராமிக்கே, இவளது பதில் பிரமிக்க வைக்கிறது.

எப்படியிருந்தவள், எப்படி மாறிவிட்டாள்?

ஆனால்-

அந்த முறை நாலு பேர் சுமக்க வந்த குமார், போதையில வரவில்லை... உண்மையிலேயே மிக மோசமான நிலையில் வந்து சேருகிறான்.

"பூந்தமல்லி ஹைரோட்டுல முந்தாநாள் ராவு விழுந்து கிடந்தாருங்க... குடிச்சுட்டு கிடக்காரு... போதை தெளிஞ்சதும் எழுந்து, போயிடுவாருன்னு எங்க டீக்கடை பெஞ்சுல போட்டு வச்சிருந்தோம்... நேத்து முழுசா கிடந்தாரு... போதை தெளியவே இல்லே... இன்னிக்குத்தான் விலாசம் விசாரிச்சு எடுத்துட்டு வர முடிஞ்சது..."

கூட வந்தவர்கள் சொல்லி முடிக்கக்கூட இல்லை. மரகதம், நெஞ்சில் அடித்துக் கொண்டு 'ஹோ' வென அலறுகிறாள்.

"மோசம் பண்ணிட்டுப் போயிடாதேடா..."

அன்று - ஆஸ்பத்திரியில் சேர்ந்ததுமே டாக்டர் தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

"இன்னும் இருபத்தி நாலு மணி நேரம் போனாத்தான் சொல்ல முடியும்..."

அவ்வளவுதான்.

ஆஸ்பத்திரி வார்டில், ஊரே திரண்டு விட்டது. கும்பலின் நடுவில் - ஆர்ப்பாட்டமாய் அழுதபடி மரகதம்... அடித்து உதைத்த அண்ணன்கள் கூட, அழுதபடியே- குமாரின் பக்கத்தில்....

நந்தினியின் பிறந்த வீட்டினர்வேறு ஒரு பக்கமாய்...

"என் கண்ணே... கற்பகாம்பிகைக்கு தாலி வாங்கிப் போடறேன்னு வேண்டிக்கோ..."

நந்தினி, தனது மார்பில் ஊசலாடிய தாலியையே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கிறாள்.

'அம்பிகே... தாயே... நான் நினைக்கறபடி நடந்துடுச்சுன்னா... நடந்துடுச்சுன்னா... இந்தத் தாலியையே உன் பாதத்துல கொண்டு வந்து சமர்ப்பிச்சுடறேன் அம்மா...''

இரவு -

அவளை மட்டும், ஒரு ஆண் பிள்ளை துணையுடன் வார்டில் தங்க அனுமதிக்கிறார் டாக்டர்...

அனைவர்கள் கோவிலுக்குப்போய் அர்ச்சனை செய்து வருகிறார்கள்.

நந்தினியின் தாய் கடவுளை வேரோடு கிள்ளிக் கொண்டிருக்கிறாள்.

அப்பா, ஆஸ்பத்திரி வெராந்தாவில் அமர்ந்து - தனது இஷ்ட தெய்வத்தைக் கண்ணீர் மல்க அழைத்துக் கொண்டிருக்கிறார்.

விடிகாலைப் பொழுதில் - மெல்லிய குரலில் முனகுகிறான் குமார்.

நந்தினி, அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்.

அப்பா, டாக்டரை அழைக்க ஓடுகிறார்...

குமாரைப் பரிசோதித்த டாக்டரின் முகத்தில் புன்னகை -

''உங்க மருமகன் அதிருஷ்டசாலி சார்... மிஸ்டர் குமாருக்கு நினைவு தெளிய ஆரம்பிச்சுடுச்சி. ஆனா... இன்னும் கொஞ்ச நாளைக்கு ஆஸ்பிட்டல்லேயே இருக்க வேண்டியிருக்கும்...''

''தாங்க் யூ...தாங்க் யூ வெரிமச்...''

அப்பா, டாக்டரின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதே விட்டார்.

''இன்னும் ஏம்மா கவலைப்படறீங்க... ஹீ இஸ் ஆல்ரைட் நௌ... தண்ணியோ, ஜூஸோ எது கேட்டாலும் கொடுங்க...''

டாக்டர் போனதும் அப்பா பரபரக்கிறார்.

''நந்தினி, நான் போய் குமார் வீட்டுக்கும் நம்ம வீட்டுக்கும் போன் பண்ணிட்டு வந்துடறேன்...''

''உம்...''

''ராத்திரி முழுக்க யாரும் தூங்கியிருக்க மாட்டாங்க...''



அவள், அந்த வயசிலும் அவர் ஓடுவதையே பார்த்தபடி, கண்களில் நீர் வழிய உட்கார்ந்திருக்கிறாள்...

''நந்தினி...''

குமார்தான்...

''இதோ...''

அவள் எழுந்து அவனருகில் போகிறாள்...

''பசிக்குது... பசி...''

''இதோ... இருங்க ஜூஸ் தரேன்...''

அவள், அவசர அவசரமாய் சாத்துக்குடியைப் பிழிந்து ஜூஸ் தயாரித்து, அவனது வாயில் புகட்டுகிறாள்...

அப்பா திரும்பி வந்து புன்னகைக்கிறார்...

''எல்லாரும் இன்னும் அரை மணி நேரத்துல இங்கே வர்றாங்க... ராஜரத்னம் மாத்திரம், கோவிலுக்குப் போயிட்டு வர்றதா சொன்னார்...''

''மாப்பிள்ளை ஏதாவது சாப்பிட்டாராம்மா..?''

''உம், கொஞ்சம் ஜூஸ்...''

''வெரிகுட்...''

அவர்கள் வர ஒரு மணி நேரமாகிறது...

குமாரின் அண்ணன் சிவராம்தான் ஓடி வந்து, தம்பியின் கையைப் பிடித்துக் குலுக்குகிறான்.

ஆனால்-

குமாரின் கை, தொய்ந்து விழ... அத்தனைப் பேருடைய விழிகளிலும் - ஒரு விபரீதத்தை சந்தித்து விட்ட அதிர்ச்சி...

''அய்யய்யோ... என்னங்க இது...''

அபிராமிதான் அலறுகிறாள்.

நந்தினியின் அண்ணன், டாக்டரை அழைக்க ஓடுகிறான்...

''எப்படி...? நான் சித்த முந்தி வந்து பார்த்தப்ப மயக்கம் நல்லாத் தெளிஞ்சிருந்தது... ஏதாவது சாப்பிட்டாராம்மா..?''

டாக்டர், சொல்லொண்ணாத வருத்தத்துடன் நந்தினியைப் பார்த்துக் கேட்க...

''உம்... அரை தம்ளர் ஜூஸ்...''

''ஓ...''

டாக்டர், முகவாயைச் சொறிகிறார்.

''குடிச்சு குடிச்சு ஏற்கனவே ஹார்ட் ரொம்ப வீக்காயிருந்தது... சட்டுனு ஜூஸ் இறங்கறப்ப அப்படியே ஸ்டக் அப் ஆகியிருக்கும்... ஐ'யாம் ஸாரி...''

அடுத்த கணமே-

அங்கு வந்த மரகதம், நிலைமையைப் புரிந்துகொண்டு பெரிசாய் ஒப்பாரி வைக்கிறாள்.

நந்தினியின தாய், அவளைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.

''பச்சைக்கிளி மாதிரி வளர்த்தேனே.. இப்படியொரு இடி இறங்கும்னு நினைக்கலையே...''

நந்தினி, எல்லாருடைய அழுகையையும் செவிமடுத்தபடி மௌனமாய், அமைதியாய்...

பத்தாம்நாள், அவளது கழுத்திலிருந்த தாலியைக் கழற்றும் போது மட்டும், அந்தப்பெண்களிடம் ஒரு வார்த்தை சொன்னாள்.

''அந்தத் தாலிய என்கிட்டயே கொடுத்துடுங்கோ. இப்ப இல்லையின்னாலும் எப்பாவது நான் கோவிலுக்குப் போறப்ப அம்பாளுக்கு சார்த்தணும்.''

''புருஷனே போயாச்சு. அப்புறம் என்னடி வேண்டுதல்... இளம் குழந்தைக்கு கண் திறக்காத சாமியும் ஒரு சாமியா...''

அம்மா, கதறுகிறாள்.

''இல்லேம்மா. இது என் தனிப்பட்ட வேண்டுதல்...''

நந்தினி, அந்த திருமாங்கல்யத்தை வாங்கி, ஒரு சிறிய காகித உறையில் போடுகிறாள்...

அந்த காகித உறை...

குமாரின் சட்டைப் பையிலிருந்தபடி அடிக்கடி அவளை பயமுறுத்திய - தூக்க மாத்திரைகள் போட்டு வைத்திருந்த உறை...

இப்பொழுது அந்த உறை காலியாகிவிட்டது....

எப்பொழுது..?

பத்து நாட்களுக்கு முன்பே...



நந்தினி, தனது மூட்டை முடிச்சுக்களுடன் கிருபாவையும் சுமந்துகொண்டு பிறந்த வீட்டுக்குப் பயணமாகி விட்டாள்...

''அப்பா, அங்கே வந்து நான் சும்மாயிருக்கப்போறதில்லே, என்னை, இதோ இந்த ஸ்கூல்லே வேலைக்கு சேர்த்துடுப்பா. மாசம் மூவாயிரம் ரூபா சம்பளம்...''

''உனனிஷ்டமமை...''

''உம்... அப்புறம்... ஒரு விதவையோட தங்கைக்கும், பொண்ணுக்கும் கல்யாணமாறதுலே எந்தவித பிரச்சனையுமிருக்கககூதே..?''

அப்பா, சட்டெனத் திரும்பிப் பார்க்கிறார்.

அவள் முகத்தில் - அந்த இதழ்க்கடையில - சின்ன சிரிப்பு அரும்பு கட்டியிருப்பது போல...

அவர், கண்களைத் துடைத்துக்கொள்கிறார்.

**முற்றும்.**